


PRGI No. TNBIL/25/A1569

வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 266 08.05.2026 வெள்ளிக்கிழமை

Chennai Volume: 01 Issue: 266 Friday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY

# ‘தவெக ஆட்சியமைக்க தேவையான பெரும்பான்மையை நிரூபிக்கவில்லை’

## பலத்தை நிரூபித்தால்தான், ஆட்சி அமைக்க உரிமை கோர முடியும்: கவர்னர் மாளிகை

**சென்னை, மே 8:**

தமிழக சட்டசபை தேர்தலில் விஜய்யின் தவெக 108 இடங்களை கைப்பற்றியது. தவெகவுக்கு காங்கிரஸ் ஆதரவு கொடுத்துள்ள நிலையில், தற்போதுள்ள தவெகவின் பலம் 112 ஆக உள்ளது. ஆட்சி அமைக்க 118 இடங்கள் தேவை என்ற நிலையில், மற்ற கட்சிகள் தவெகவுக்கு இன்னும் ஆதரவு கொடுக்கவில்லை.

முன்னதாக, தவெக தலைவர் விஜய், நேற்று மாலை கவர்னர் அர்லேகரை சந்தித்தார். அப்போது தங்களை ஆட்சி அமைக்க அழைக்கக் கோரி கவர்னரிடம் கடிதம் வழங்கினார். ஆனால், பெரும்பான்மைக்கு தேவையான 118 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு விஜய்க்கு இல்லாததால், அவரை ஆட்சியமைக்க வரும்படி கவர்னர் அழைக்கவில்லை.

இந்த பரபரப்பான சூழலில், தவெக தலைவர் விஜய் இன்று மீண்டும் கவர்னரை சந்தித்தார். இந்த சந்திப்பின்போது, தனிப்பெரும் கட்சி என்ற அடிப்படையில் தங்களை ஆட்சியமைக்க அழைக்க வேண்டும் என கவர்னரிடம் விஜய் கோரிக்கை வைத்துள்ளார். முதல்-அமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் சட்டசபையில் பெரும்பான்மையைநிரூபிப்பேன் எனவும் கவர்னரிடம் விஜய் மீண்டும் வலியுறுத்தியுள்ளதாக கூறப்பட்டது. கவர்னர் - விஜய் இடையேயான சந்திப்பு சுமார் 40 நிமிடங்கள் நீடித்தது.



### விஜய்யிடம் கவர்னர் எழுப்பிய கேள்விகள்..:-

113 எம்.எல்.ஏ.க்களை மட்டும் வைத்துக் கொண்டு தமிழ்நாட்டில் எப்படி ஆட்சி அமைப்பீர்கள்?. 234 எம்எல்ஏக்களை கொண்ட தமிழ்நாடு சட்டசபையில் 113 எம்எல்ஏக்களை வைத்துக் கொண்டு நிலையான அரசு அமைக்க முடியுமா..?. 113 எம்எல்ஏக்கள் மட்டுமே இருப்பதால் வேறு எந்த கட்சிகளின் ஆதரவு தவெகவிற்கு கிடைக்கும்..?. இவ்வாறு கேள்விகள் கேட்டுள்ளார்.

ஆட்சி அமைக்க விஜய்க்கு அழைப்பு விடுக்காதது குறித்து கவர்னர் மாளிகை அளித்துள்ள விளக்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-

தமிழ்நாட்டில் ஆட்சி அமைக்க தேவையானபெரும்பான்மையை த.வெ.க. நிரூபிக்கவில்லை. பலத்தை நிரூபித்தால்தான், ஆட்சி அமைக்க உரிமை கோர முடியும். சட்டசபையில் யார் பெரும்பான்மையை நிரூபிக்க முடியுமென கவர்னர் கருதுகிறாரோ, அவரையே ஆட்சி அமைக்க அழைக்க அரசியல் சாசனம் வழிவகை செய்கிறது. தனிப்பெரும் கட்சியாக இருந்தாலும், போதுமான பலம் இருப்பதை கவர்னரிடம் உறுதிப்படுத்த வேண்டும். கவர்னரின் இந்த முடிவை அரசியல் சாசனப்பிரிவு 361-ன் படி எளிதில் கேள்வி கேட்க முடியாது.

பெரும்பான்மை இருக்கிறது என விஜய் நிரூபித்தால் அடுத்த நிமிடம் கவர்னர் ஆட்சி அமைக்க அழைப்பு விடுப்பார். தமிழ்நாட்டில் நிலையான அரசு அமைய வேண்டும் என்பதில் கவர்னர் உறுதியாக உள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பல்வேறு விளக்கங்களை கூறி கவர்னர் தற்போதைய சூழலில் விஜய்க்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்க மறுப்பு தெரிவித்தாக தகவல் வெளியாகியுள்ளது. பெரும்பான்மை இருக்கிறது என நிரூபித்தால் மட்டுமே விஜய்க்கு முதல்-அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து வைக்க கவர்னர் முடிவு செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

### சட்ட நிபுணர்களுடன் ஆலோசனை

தவெக ஆட்சியமைப்பதில் சிக்கல் நீடிக்கும் நிலையில் சட்ட நிபுணர்களுடன் தவெக தலைவர் விஜய் ஆலோசனை நடத்தி வருகிறார். பட்டினப்பாக்கம் அலுவலகத்தில் நடைபெறும் ஆலோசனையில் தவெக நிர்வாகிகள் ஆனந்த், ஆதவ் அர்ஜுனா உள்ளிட்டோரும் பங்கேற்றுள்ளனர். ஆட்சியமைக்க கவர்னர் இதுவரை அழைப்பு விடுக்காத நிலையில் ஆலோசனை நடந்து வருகிறது. விஜய் பதவியேற்பு நிகழ்வு குறித்தும் அடுத்தக் கட்ட நடவடிக்கை குறித்தும் தவெக எம்.எல்.ஏ.க்களுடன் பனையூரில் செங்கோட்டையன் ஆலோசனை செய்து வருகிறார். தமிழக கவர்னருடன் தவெக தலைவர் விஜய் சந்தித்து பேச்சு நடத்தியிருந்த நிலையில் செங்கோட்டையன் ஆலோசனையில் ஈடுபட்டுள்ளார்.

# தவெக ஆட்சியமைக்க திமுக இடையூறு செய்யாது - மு.க.ஸ்டாலின் திட்டவட்டம்

**சென்னை, மே 8:**

தமிழக அரசியல் வரலாற்றில் 2026 சட்டமன்ற தேர்தல் ஒரு முக்கிய திருப்பமாக அமைந்துள்ளது. புதிய வரவான த.வெ.க. 108 இடங்களை கைப்பற்றி தனிப்பெரும் கட்சியாக உள்ளது. இதனையடுத்து தமிழக கவர்னர் அர்லேகரை சந்தித்து. விஜய் நேற்று மாலை ஆட்சி அமைக்க உரிமை கோரினார்.

அப்போது அவர், த.வெ.க.வின் 108 எம்.எல்.ஏ.க்கள் மற்றும் காங்கிரசைச் சேர்ந்த 5 எம்.எல்.ஏ.க்கள் என மொத்தம் 113 எம்.எல்.ஏ.க்களின் பட்டியலை வழங்கினார். ஆனால் அதை பெற்றுக்கொண்ட கவர்னர், 118 எம்.எல்.ஏ.க்கள் பெயர் பட்டியலை கொண்டு வந்தால்தான் ஆட்சி அமைக்க அனுமதிக்க முடியும் என்று திட்டவட்டமாக கூறிவிட் டார்.



இதனால் விஜய் இன்று முதல்-அமைச்சராக பொறுப் பேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் புதிய அரசு அமைவதில் இழுபறி நீடித்து வருகிறது.

இதற்கிடையே, விஜய்யால் ஆட்சி அமைக்க முடியாததால், தி.மு.க. ஆதரவுடன் அ.தி.மு.க. ஆட்சி அமைக்க உள்ளதாக ஒரு தகவல் நேற்று இரவு காட்டுத்தீ போல் பரவியது. இதற்கு ஏற்றார்போல் இரு கட்சிகளும் தனித்தனியாக நேற்று பல மணி நேரம் ஆலோசனை நடத்தின. இந்த தகவலுக்கு 2 கட்சிகளும் மறுப்பு தெரிவிக்காததால், இந்த தகவல் உண்மை என்றே அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது. இந்த நிலையில், முன்னாள் முதல்-அமைச்சரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் ஆங்கில நாளிதழுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:-

தனிப்பெரும் கட்சியான தவெக ஆட்சியமைக்க திமுக இடையூறு செய்யாது. விஜய் ஆட்சிக்கு ஆறு மாதங்களுக்கு எவ்வித இடையூறும் செய்யாமல் தொடர்ந்து கவனிப்போம். திமுக அரசின் திட்டங்களை தவெக தொடர வேண்டுமென எதிர்பார்க்கிறேன். மகளிருக்கு மாதம் ரூ.2,500 அளிப்பது கடினம்; திமுக அரசு வழங்கியது போன்று மாதம் ரூ.1,000-வது வழங்க வேண்டும்.

ஆண்டுக்கு 6 இலவச சிலிண்டர்கள் தருவதாக விஜய் வாக்குறுதி கொடுத்துள்ளார். அது சந்தேகம்தான்.. ஆனால் அதைச் செய்தால் மகிழ்ச்சி. உடனடியாக தேர்தல் வருவதை திமுக விரும்பவில்லை. அரசமைப்பு குழப்பம் ஏற்படுவதையும் திமுக விரும்பவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

# திமுக கூட்டணியிலேயே தொடருங்கள்: இடதுசாரிகளுக்கு மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்



**சென்னை, மே 8:**

தமிழக சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. 59 தொகுதிகளில் வெற்றி பெற்று எதிர்க்கட்சி அந்தஸ்தை பெற்றுள்ளது. சென்னை சேப் பாக்கம்- திருவல்லிக்கேணி தொகுதியில் வெற்றி பெற்ற உதய நிதி ஸ்டாலின் எதிர்க்கட்சி தலைவராக தேர்ந்தெடுக்கப்படலாம் என்று தெரிகிறது. இதற்கிடையில், தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற வேட்பாளர்களின் ஆலோசனை கூட்டம் இன்று (வியாழக்கிழமை) நடைபெற உள்ளது.

இந்த நிலையில், சென்னை ஆழ்வார்பேட்டை இல்லத்தில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அவசர ஆலோசனை மேற்கொண்டார். திமுக சட்டமன்றக் குழு தலைவரை தேர்ந்தெடுப்பது தொடர்பாக துரைமுருகன், உதயநிதி ஸ்டாலின், டி.ஆர்.பாலு, ஆ.ராசா, திருச்சி சிவா, கனிமொழி, பொன்முடி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதனையடுத்து, திமுக தலைவர் மு.க.ஸ்டாலினை விசிக தலைவர் திருமாவளவன், கம்யூனிஸ்டு கட்சிகளின் தலைவர்கள் சண்முகம் மற்றும் வீரபாண்டியன் ஆகியோர் சந்தித்து பேசியுள்ளனர். ஆட்சி அமைக்க விசிக, கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆதரவை விஜய் கோரியுள்ள நிலையில் ஸ்டாலினை சந்தித்துள்ளனர். அப்போது திமுக கூட்டணியில் இருந்து வெளியேற வேண்டாம் என்றும் தற்போது அவசரப்பட்டு முடிவெடுக்க வேண்டாம் எனவும் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியதாக கூறப்படுகிறது.

# தமிழகத்தில் முக்கிய இடங்களில் பாதுகாப்பை அதிகரிக்க உளவுத்துறை எச்சரிக்கை

**சென்னை, மே 8:**

தமிழக அரசியல் வரலாற்றில் 2026 சட்டமன்ற தேர்தல் ஒரு முக்கிய திருப்பமாக அமைந்துள்ளது. புதிய வரவான த.வெ.க. 108 இடங்களை கைப்பற்றி தனிப்பெரும் கட்சியாக உள்ளது.

இந்த சூழலில் தமிழக கவர்னர் அர்லேகரை சந்தித்து. விஜய் நேற்று மாலை ஆட்சி அமைக்க உரிமை கோரினார். அப்போது அவர், த.வெ.க.வின் 108 எம்.எல்.ஏ.க்கள் மற்றும் காங்கிரசைச் சேர்ந்த 5 எம்.எல்.ஏ.க்கள் என மொத்தம் 113 எம்.எல்.ஏ.க்களின் பட்டியலை வழங்கினார். ஆனால் அதை பெற்றுக்கொண்ட கவர்னர், 118 எம்.எல்.ஏ.க்கள் பெயர் பட்டியலை கொண்டு வந்தால்தான் ஆட்சி அமைக்க அனுமதிக்க முடியும் என்று திட்டவட்டமாக கூறிவிட்டார். இதனால் விஜய் நேற்று முதல்-



அமைச்சராக பொறுப்பேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கிடையில், பா.ம.க., கம்யூனிஸ்டுகள் மற்றும் வி.சி.க. ஆகியவற்றின் ஆதரவை எளிதாக பெற்றுவிடலாம் என்று எண்ணிய த.வெ.க.வின் கனவு தகர்ந்தது. அந்த கட்சிகள் அனைத்தும் பின்வாங்கியுள்ளன. எனவே த.வெ.க.வுக்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை. அதனால் விஜய் முதல்-அமைச்சர் ஆவாரா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதற்கிடையே, விஜய்யால் ஆட்சி அமைக்க முடியாததால், தி.மு.க. ஆதரவுடன் அ.தி.மு.க. ஆட்சி அமைக்க உள்ளதாக ஒரு தகவல் காட்டுத்தீ போல் பரவியது.

இதற்கு ஏற்றார்போல் இரு கட்சிகளும் தனித்தனியாக நேற்று பல மணி நேரம் ஆலோசனை நடத்தின. தி.மு.க., அ.தி.மு.க. கூட்டணிக்கு அச்சாரமாகத்தான் ரஜினிகாந்தும் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினை சந்தித்தார் என்றும் கூறப்படுகிறது. இந்த தகவலை 2 கட்சிகளும் மறுப்பு தெரிவிக்காததால், இந்த தகவல் உண்மை என்றே அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்பட்டது.

தமிழகத்தில் நிலவும் இந்த பரபரப்பான அரசியல் சூழலால், தமிழகத்தின் முக்கிய இடங்களில் பாதுகாப்பை அதிகரிக்க தமிழக போலீசாருக்கு மத்திய உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

தவெக தலைவர் விஜய் இன்னும் ஆட்சி அமைக்காத சூழலில், சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்பட வாய்ப்புள்ளதாக உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## இன்றைய நாள்

வெள்ளிக்கிழமை
(08-05-2026)
பராபவ ஆண்டு, சித்திரை-25
பிறை: தேய்பிறை
திதி
சஷ்டி காலை 9.43 வரை
பிறகு சப்தமி

நட்சத்திரம்:
உத்திராடம் இரவு 6.36 வரை
பிறகு திருவோணம்

யோகம்
சித்த/மரண யோகம்
ராகுகாலம்
காலை 10.30-12.00 மணி.
எமகண்டம்
பிற்பகல் 3.00-4.30 மணி
சூலம் - மேற்கு

நல்ல நேரம் :
காலை 6-7 மணி.
மாலை 5-6 மணி.

| | |
|---|---|
| மேஷம் | தனம் |
| ரிஷபம் | நட்பு |
| மிதுனம் | சுபம் |
| கடகம் | சுகம் |
| சிம்மம் | பரிசு |
| கன்னி | ஓய்வு |
| துலாம் | வெற்றி |
| விருச்சிகம் | மாற்றம் |
| தனுசு | நலம் |
| மகரம் | நன்மை |
| கும்பம் | தெளிவு |
| மீனம் | மகிழ்ச்சி |

# தங்கம் விலையில் இன்று ஏற்றம்

**சென்னை, மே 8:**

தங்கம் விலையில் ஏற்றம்-இறக்கம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. கடந்த 4-ந்தேதி விலையில் மாற்றம் இல்லாமல் இருந்தது. நேற்று முன்தினம் கிராமுக்கு ரூ.180-ம், சவரனுக்கு ரூ.1,440-ம் குறைந்து காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து நேற்று ஒரே நாளில் 2 முறை விலை ஏற்றம் கண்டது.

அதன்படி, நேற்று முன்தினம் ஒரு கிராம் ரூ.13 ஆயிரத்து 820-க்கும், ஒரு சவரன் ரூ.1 லட்சத்து 10 ஆயிரத்து 560-க்கும் விற்கப்பட்டது. நேற்று காலை நேர நிலவரப்படி, கிராமுக்கு ரூ.230-ம், சவரனுக்கு ரூ.1,840-ம் உயர்ந்தது. பின்னர் மாலை கூடுதலாக கிராமுக்கு ரூ.50-ம், சவரனுக்கு ரூ.400-ம் அதிகரித்தது. இப்படியாக நேற்று ஒரே நாளில் கிராமுக்கு ரூ.280-ம், சவரனுக்கு ரூ.2,240-ம் உயர்ந்து. ஒரு கிராம் ரூ.14 ஆயிரத்து 100-க்கும், ஒரு சவரன் ரூ.1 லட்சத்து 12 ஆயிரத்து 800-க்கும் விற்பனை ஆனது. வெள்ளி விலையை பொறுத்தவரையில், நேற்று கிராமுக்கு ரூ.10-ம், கிலோவுக்கு ரூ.10 ஆயிரமும் அதிகரித்து, ஒரு கிராம் ரூ.275-க்கும், ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 75 ஆயிரத்துக்கும் விற்கப்பட்டது.

தங்கம் விலை

இந்த நிலையில், சென்னையில் தங்கம் விலை இன்று மேலும் அதிகரித்துள்ளது. அதன்படி, தங்கம் கிராமுக்கு ரூ.50-ம், சவரனுக்கு ரூ.400-ம் உயர்ந்து, ஒரு கிராம் ரூ. 14,150-க்கும், ஒரு சவரன் ரூ.1,13,200-க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.



## திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுடன் கூட்டணிக் கட்சி தலைவர்கள் சந்திப்பு!!



திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுடன் கூட்டணிக் கட்சி தலைவர்கள் சந்தித்தனர். மு.க.ஸ்டாலினுடன் வி.சி.க. தலைவர் திருமாவளவன், மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் சண்முகம், இந்திய கம்யூ. மாநிலச் செயலாளர் வீரபாண்டியனும் சந்தித்தனர். ஆழ்வார்பேட்டை இல்லத்தில் கூட்டணி கட்சித் தலைவர்களுடன் மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தி வருகிறார்.

## "ஜல்லிக்கட்டு போராட்டம் போல் மெரீனாவில் கூடுவோம்".. சமூகவலைதள பதிவுகளால் காவல்துறை நடவடிக்கை



**சென்னை, மே 08:**
தவெக தலைவர் விஜய்யை ஆட்சி அமைக்க ஆளுநர் அழைப்பு விடுக்காத சூழ்நிலையில் சமூக வலை தளங்களில் ஜல்லிக்கட்டு போராட்டம் போல மெரீனாவில் போராட்டம் வெடிக்கும் என்ற தகவல்கள் பரவி வருகிறது. குறிப்பாக தமிழகத்தில் பாதுகாப்பை பலப்படுத்துமாறு மத்திய உளவுத்துறையும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனால் மெரீனா கடற்கரை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் போலீஸ் குவிக்கப்பட்டு கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது . உழைப்பாளர் சிலை இருந்து கலங்கரை விளக்கம் வரை ரோந்து பணி தீவிரப்படுத்தப்பட்டு மெரீனா சர்வீஸ் சாலைக்குள் செல்லும் வாகனங்கள் அனைத்தும் போலீசார் சோதனைக்கு பிறகே அனுமதிக்கப்படுகிறது .

2 காவல் உதவி ஆணையர்கள் தலைமையில் 8 காவல் ஆய்வாளர்கள் உள்ளிட்ட சுமார் 400 போலீசார் சுழற்சி முறையில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது .குறிப்பாக ஜல்லிக்கட்டு போராட்டத்திற்கு பிறகு மெரீனாவில் போராட்டம் நடத்த வருபவர்கள் எங்கிருந்து வருவார்கள் என்பதை போலீசார் கண்டறிந்து வைத்து அங்கு கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளது.

கண்ணகி சிலை பேருந்து நிலையம், மற்றும் கண்ணகி சிலை பின்புறம் சர்வீஸ் சாலை, விவேகானந்தர் இல்லம் எதிரே உள்ள பிளாட்பாரம், டாக்டர் பெசன்ட் சாலை சந்திப்பு, சர்வீஸ் சாலை மாற்றுத்திறனாளிகள் மரம் பாதை, ப்ளூ பிளாக் பீச் நுழைவு சர்வீஸ் சாலை, ஔவையார் சிலை பின்புறம் உள்ள சர்வீஸ் சாலை, விபி ராமன் சாலை சந்திப்பு, காந்தி சிலை பின்புறம் உள்ள சர்வீஸ் சாலை, கலங்கரை விளக்கம் நுழைவு வாயில், லூப் சாலை உள்ளிட்ட பகுதிகளில் போலீசார் கூடுதலாக குவிக்கப்பட்டு கண்காணிப்பு பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் முன்னெச்சரிக்கை யாகநடவடிக்கையாகசென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகம், திமுக தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயம் , பாஜக தலைமை அலுவலகமான கமலாலயத்திலும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## தமிழகம் முழுவதும் உள்ள அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் சேர விண்ணப்பிக்கலாம் கல்லூரிக் கல்வி ஆணையர்



**சென்னை, மே 08:**
தமிழகம் முழுவதும் உள்ள 181 அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் சேர இன்றுமுதல் மாணவர்கள் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். இது தொடர்பாக கல்லூரிக் கல்வி ஆணையர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் 2026-27-ம் கல்வி ஆண்டில் இளங்கலை பட்டப் படிப்பு முதலாம் ஆண்டில் சேர மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதற்கு www.tngasa.in என்ற இணையதளத்தில் இன்று முதல் 29ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்.

இணையதள வசதி இல்லாத மாணவர்கள் விண்ணப்பிக்க ஏதுவாக, அனைத்து அரசு கலை, அறிவியல் கல்லூரிகளிலும் சேர்க்கை உதவி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணம் ரூ.50. எஸ்சி, எஸ்டி மாணவர்கள் விண்ணப்பக் கட்டணம் (ரூ.48) செலுத்த தேவையில்லை. பதிவுக் கட்டணம் ரூ.2 மட்டும் செலுத்தினால் போதும். கட்டணங்களை டெபிட் கார்டு, கிரெடிட் கார்டு, நெட் பேங்கிங், யுபிஐ மூலம் ஆன்லைனில் செலுத்தலாம்.

தமிழகம் முழுவதும் மொத்தம் உள்ள 181 அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் 159 பாடப் பிரிவுகளில் 1.27 லட்சம் இடங்கள் உள்ளன. மாணவர்கள் தாங்கள் விரும்பும் கல்லூரியில் விருப்பப்பட்ட பாடப் பிரிவுகளுக்கு ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள 181 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், 159 வகையான படிப்புகளில் மொத்தம் 1,26,959 இடங்கள் உள்ளன. இதில், முதலாம் சுழற்சியில் 1,01,022 இடங்களும், இரண்டாம் சுழற்சியில் 25,937 இடங்களும் சேர்க்கப்பட உள்ளன.ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால், 044-24343100 / 044-24342011 என்ற எண்களில் தொடர்புகொள்ளலாம்

## "பாஜகவுக்கு எதிராக பேசாத விஜய் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை"

### காங்கிரஸ் எம்.பி தடாலடி



**திருச்சி, மே 08:**
பாஜகவுக்கு எதிராக பேசாத விஜய் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை. அதே நேரத்தில் தவெகவிற்குள் பாஜக நுழைந்து விடக்கூடாது என்பதற்காக நாங்கள் ஆதரவு தெரிவித்துள்ளோம் என்று திருச்சியில் காங்கிரஸ் எம்பி கிறிஸ்டோபர் திலக் கூறினார்.

திருச்சியை சேர்ந்த காங்கிரஸ் மாநிலங்களவை உறுப்பினரும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் செயலாளருமான எம். கிறிஸ்டோபர் திலக், திருச்சி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகத்தில் புதிய அரசு அமைவதில் அடுத்த இரண்டு நாட்களில் ஒரு தெளிவு பிறக்கும். அடுத்த 10 நாட்களுக்குள் புதிய அரசு பொறுப்பேற்கும் எனவும் நம்புகிறேன்.

தவெகவிற்கு 35% வாக்குகளும், திமுகவிற்கு 30% வாக்குகளும் கிடைத்துள்ளது. இது பாஜகவுக்கு எதிரான மக்களின் மனநிலையை காட்டுகிறது. பாஜக தமிழகத்தில் காலூன்றகூடாது என்ற நோக்கில் மக்கள் வாக்களித்துள்ளனர்.

மதச்சார்பின்மையை பாதுகாக்கும் அரசு அமைய வேண்டும் என்பதற்காக காங்கிரஸ் கட்சி தனது ஆதரவை தவெகவுக்கு வழங்கியுள்ளது. பாஜக காலூன்ற இடம் கொடுத்துவிடக் கூடாது என்பதற்காக காங்கிரஸ் கட்சி இந்த முடிவை எடுத்துள்ளது. காங்கிரஸ் சேர்ந்ததால் தவெகவிற்குள் பாஜகவால் நுழைய முடியாது. பாஜகவை எதிர்த்து விஜய் ஏன் பேசவில்லை என்று நீங்கள் அவரிடம் தான் கேட்க வேண்டும்.

நாங்கள் தவெகவை நம்பவில்லை. அதே நேரத்தில் பாஜகவிற்கு எதிராக மக்கள் தவெகவிற்கு வாக்களித்து உள்ளதால் நாங்கள் அங்கு சேர்ந்துள்ளோம். தாங்கள் மதச்சார்பின்மைகொள்கையில் உறுதியாக இருக்கிறோம் என தெரிவிக்க வேண்டியது தவெகவினரின் கடமை.

ராகுல் காந்தியின் அடிப்படை நோக்கம் பாஜகவின் நகர்வுக்கு முன் நாம் முந்திக் கொள்ள வேண்டும் என்பதுதான். தமிழ்நாட்டை பாஜக சின்னாபின்னமாக்க வேண்டும் என எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதை தடுக்கவே நாங்கள் தவெகவிற்கு ஆதரவு தெரிவித்துள்ளோம்.

அதை சரியாக பயன்படுத்த வேண்டியது தவெகவின் கடமை. கடந்த நாடாளுமன்ற தேர்தலில் கூட்டணி கட்சி வாக்குகள் மூலமாகத்தான் திமுகவில் 39 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெற்றி பெற்றார்கள். அதுபோல நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலிலும், உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட வெற்றிபெற்ற அனைவரும் கூட்டணி கட்சி வாக்குகள் மூலமாகத்தான் வெற்றி பெற்றுள்ளார்கள்.

ஆளும் கட்சியாக இருந்து தேர்தலை சந்தித்த திமுக வேட்பாளர்கள் பெருமளவில் பணம் செலவழித்து தான் தேர்தலில் போட்டியிட்டார்கள். ஆனால் விஜய் கட்சியில் உள்ளவர்கள் பெரும் செலவு செய்து போட்டியிடவில்லை. ஒரு சிலரை தவிர விசில் சின்னத்தில் போட்டியிட்ட வேட்பாளர்கள் யார் என்பது கூட மக்களுக்கு தெரியது. ஆனாலும் அவர்கள் வெற்றி பெற்றுவிட்டார்கள்.

இதனால் செலவு செய்த பணத்தை திரும்ப எடுக்க வேண்டிய நிலை அவர்களுக்கு இல்லை. எனவே இது ஊழலுக்கு வழிவகுக்காது. இதேபோல, ஆளும் கட்சியாக இல்லாத காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களும், பொருள் செலவு செய்யாமல் வெற்றி பெற்று இருக்கிறார்கள்.

தமிழகத்தில் பாஜக காலூன்றி விடக்கூடாது என்பதற்காகதான் ஸ்டாலின் கடந்த 5 ஆண்டுகளாக அரசியல் செய்தார். அதே போன்றுதான் காங்கிரஸும் தற்போது இந்த முடிவை எடுத்துள்ளது. நாடாளுமன்ற தேர்தலுக்குள் ஏதேனும் குழப்பங்களை ஏற்படுத்தலாமா? என பாஜக முயற்சித்து வரும் நிலையில், அதனை முறியடிக்கும் விதமாகத்தான் காங்கிரஸ் இந்த முடிவை எடுத்துள்ளது.

ஒரு நடிகருக்கான ரசிகர்கள் பட்டாளம் மற்றும் அரசுக்கு எதிரான மக்கள் நிலைப்பாடு போன்றவையும் தவெக வெற்றிக்கு காரணமாக அமைந்துள்ளது. ஒரு "சீன் கிரியேட்" பண்ண வேண்டும் என்பதற்காக தான் ரஜினியும் ஸ்டாலினை சந்தித்து பேசியுள்ளார்.

இவ்வாறு அவர் கூறினார்.

## புதுச்சேரி விடுதியில் தமிழக அதிமுக எம்எல்ஏக்கள்: இபிஎஸ் விரைவில் ஆலோசனை



**புதுச்சேரி, மே 08:**
புதுச்சேரி விடுதிக்கு தமிழக அதிமுக எம்எல்ஏக்கள் வந்து கொண்டு இருக்கின்றனர். இவர்களுடன் அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி விரைவில் ஆலோசனை இங்கு நடத்த இருகிறார்.

நடந்து முடிந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் ஆளும் கட்சியான திமுக, எதிர்க்கட்சியான அதிமுக ஆகிய இரு திராவிட கட்சிகளை பின்னுக்கு தள்ளி தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களில் வெற்றி பெற்றது. ஆனால் ஆட்சியை கைப்பற்றும் அளவுக்கு தவெகவுக்கு தனி மெஜாரிட்டி கிடைக்கவில்லை.

இதனால் தவெக ஆட்சி அமைக்க ஆதரவு தரும்படி காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், மார்க்சிஸ்ட், இந்திய. கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு கடிதம் அனுப்பினார். இதில் திமுக கூட்டணியில் இருந்து வெளியேறிய காங்கிரஸ் தனது 5 எம்எல்ஏக்களுடன் நிபந்தனையுடன் தவெகவுக்கு ஆதரவு அளித்தது. மேலும், அதற்கான கடிதத்தையும் விஜயிடம் காங்கிரஸ் கட்சியினர் நேரில் சந்தித்து வழங்கினர்.

இதனால் தவெக ஆட்சி அமைக்க எம்எல்ஏக்கள் பலம் 113 ஆக உயர்ந்தது. இதனால் தன்னை ஆட்சி அமைக்க அழைக்கும்படி தமிழகத்தின் தற்போதைய பொறுப்பு ஆளுநரை தவெக தலைவர் விஜய் சந்தித்து எம்எல்ஏக்கள் ஆதரவு கடிதத்தை வழங்கினார். இருப்பினும் போதிய எம்எல்ஏக்கள் ஆதரவு இல்லாததால் ஆட்சி அமைக்க அழைப்பு விடுக்கப்படவில்லை. மேலும், 118 எம்எல்ஏக்கள் பட்டியலுடன் வந்தால்தான் ஆட்சி அமைக்க முடியும் என பொறுப்பு ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் அதிமுக எம்எல்ஏக்கள் ஆலோசனை கூட்டம், நேற்று சென்னை பசுமை வழி சாலையில் உள்ள பழனிசாமி இல்லத்தில் நடந்தது. இதில் முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் தலைமையிலான எம்எல்ஏக்கள் தவெகவுக்கு ஆதரவு அளிக்க வலியுறுத்தியதாக கூறப்படுகிறது.

ஆனால் இதனை பழனிசாமி மற்றும் முன்னாள் அமைச்சர்கள், கட்சி நிர்வாகிகள் ஆகியோர் ஏற்கவில்லை என கூறப்படுகிறது. இக்கூட்டத்துக்கு பின் பேசிய அதிமுக துணை பொதுச் செயலாளர் முனுசாமி, 'தவெகவுக்கு எந்த வகையிலும் அதிமுக ஆதரவு அளிக்காது' என பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஒப்புதலுடன் அறிவிப்பதாக கூறினார்.

இதனையடுத்து அதிமுகவின் 46 எம்எல்ஏக்களும் புதுச்சேரி பூர்ணாங்குப்பத்தில் உள்ள 'த ஷோர் திரிஷ்வம்' ரிசார்ட்டுக்கு வந்து தங்குமாறு கட்சி மேலிடம் இருந்து தகவல் கிடைக்கவே, தொடர்ந்து அதிமுக எம்எல்ஏ ஒவ்வொருவராக ரிசார்ட்டுக்கு வர தொடங்கினர்.

அங்கு அவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இன்று வரை ஓ.எஸ் மணியன், தளவாய்

## விஜய்யை ஆட்சியமைக்க அழைக்காமல் இருப்பது தமிழக மக்களின் ஆணையை அவமதிப்பதாகும்: கமல்ஹாசன்



**சென்னை, மே 08:**
"விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களில் வென்றுள்ளது. அவரை ஆட்சியமைக்க அழைக்காமல் இருப்பது தமிழ்நாட்டு மக்களின் ஆணையை அவமதிப்பதாகும்" என்று கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் தனித்து ஆட்சியமைக்கும் அதிகாரத்தை மக்கள் எந்தக் கட்சிக்கும் வழங்கவில்லை. இந்த முடிவு தமிழ்நாட்டு வரலாற்றில் முன்னெப்போதும் நிகழாதது.

எனது சகோதரர் மு.க. ஸ்டாலின், 'மக்கள் தீர்ப்பை மதிக்கிறோம்; பொறுப்பான எதிர்க்கட்சியாகச் செயல்படுவோம்' என்று அறிவித்திருக்கிறார். அவரது அரசியல் முதிர்ச்சியை நான் மதிக்கிறேன்.

இப்போது அரசியலமைப்பு பொறுப்பில் இருப்பவர்களும் அதே கடமையை நிறைவேற்ற வேண்டும். இது கோரிக்கை அல்ல, அவர்களின் அரசியலமைப்புக் கடமைக்கான நினைவூட்டல்.

விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களில் வென்றுள்ளது. அவரை ஆட்சியமைக்க அழைக்காமல் இருப்பது தமிழ்நாட்டு மக்களின் ஆணையை அவமதிப்பதாகும். 233 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இன்னும் பதவியேற்க முடியாமல் இருக்கிறார்கள். இது மாநிலத்திற்கு நேரும் அவமானம்; மக்களாட்சிக்கு ஏற்படும் சேதம்.

'பெரும்பான்மையை சட்டமன்றத்தில்தான் நிரூபிக்க வேண்டும், ராஜ் பவனில் அல்ல' என எஸ்.ஆர். பொம்மை வழக்கில் உச்ச நீதிமன்றம் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

நான் பேசிக்கொண்டிருப்பது கட்சி அரசியல் அல்ல. ஓர் இந்தியக் குடிமகனின் கொள்கைக் குரல் இது. தமிழ்நாட்டு மக்களின் தீர்ப்புக்கு மரியாதை கிடைத்தே ஆகவேண்டும்" என தெரிவித்துள்ளார்.


நடந்து முடிந்த சட்டப் பேரவைத் தேர்தலில் தனித்து தேர்தலை எதிர்கொண்ட தவெக 108 இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. திமுக 59 இடங்களிலும், அதிமுக 47 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன. காங்கிரஸ் கட்சி 5, பாமக 4, ஐயுஎம்எல் 2, சிபிஐ 2, சிபிஎம் 2, விசிக 2, பாஜக 1, தேமுதிக 1, அமமுக 1 ஆகிய தொகுதிகளில் வெற்றி பெற்றள்ளன. சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூபிக்க 118 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவை என்பது குறிப்பிடத்தக்கது.

## குரும்பூரில் பிரபல ரவுடியை துப்பாக்கியால் சுட்டுப் பிடித்தது போலீஸ்!!



**தூத்துக்குடி, மே 08:**
திருச்செந்தூர் அருகே குரும்பூரில் பிரபல ரவுடியை துப்பாக்கியால் போலீஸ் சுட்டுப் பிடித்தது. போலீசார் பிடிக்க முயன்றபோது தாக்கிவிட்டு தப்ப முயன்ற பிரபல ரவுடி மரிய அந்தோனி ஆக்னல் சுட்டுப் பிடிக்கப்பட்டார். மரிய அந்தோனி ஆக்னல் மீது கொலை, கொலை முயற்சி உள்பட 26 வழக்குகள் நிலுவையில் உள்ளன.

## சொந்த ஊருக்கு திரும்பிய வழியில், நீரோடையில் குளித்த 3 இளைஞர்கள் பலி!!



**தெலங்கானா, மே 08:**
நண்பரின் திருமணத்திற்கு சென்று விட்டு சொந்த ஊருக்கு திரும்பிய வழியில், நீரோடையில் குளித்த 27 வயதான பிரசாந்த், விகாஸ், ஆனந்த் ரெட்டி ஆகிய 3 இளைஞர்கள் உயிரிழந்தனர். நீரோடையின் ஆழத்தை கணிக்க முடியாததால், நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்

## திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தோல்வியை நினைத்து வருந்திய EPS..!

### புதுவை அதிமுக மாநில செயலாளர் தகவல்



**புதுவை, மே 08:**
தமிழக சட்டமன்ற தேர்தலில் யாருக்கும் பெரும்பான்மை கிடைக்க நிலையில், அரசியல் களம் எதிர்பார்த்ததை விட மிகவும் பரபரப்பாக காணப்டுகிறது. அதிக இடங்களை வென்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தாலும் ஆட்சியமைக்க போதுமான ஆதரவு எம்.எல்.ஏ-க்கள் இல்லாத காரணத்தால் தவெக தவித்து வருகிறது.

இந்த சூழலில் புதுவையில் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு புதுச்சேரியின் அதிமுக மாநில செயலாளர் அன்பழகன் பதில் அளித்தார். அப்போது ஒரு கேள்விக்கு பதிலளிக்கும் போது அதிமுக, திமுக கட்சிகள் என சேர்த்து பதில் கூற முற்பட்டார். இடையில் குறுக்கிட்ட செய்தியாளர் நீங்கள் சார்ந்திருக்கும் கட்சியின் பெயரை மட்டும் கூறாமல், உங்களுக்கு எதிரி கட்சியாக இருக்கும் திமுக-வின் பெயரையும் சேர்த்து சொல்கிறீர்களே என கேள்வி எழுப்பினார்.

உடனே கோபப்பட்ட அன்பழகன் என்ன கேள்வி இது.? திமுக-வும் ஒரு அரசியல் கட்சி தானே.. அதுவும் பல ஆண்டுகள் பாரம்பரியம் கொண்ட அரசியல் கட்சி தானே.. 70 ஆண்டுகளுக்கும் மேலாக மக்களுக்காக உழைத்து கொண்டிருக்கும் கட்சி தானே திமுக.. அந்த கட்சியை காரணமே இல்லாமல் கேவலப்படுத்தியா இப்போது பேச முடியும், அது முடியாது.

திமுக தலைவர் ஸ்டாலின் அவர்கள் வெற்றி வாய்ப்பை இழந்ததற்கு கூட எங்கள் கட்சி தலைவர் எடப்பாடியார் உள்ளபடியே மிகவும் வருந்தினார். இது உண்மை, நான் அவரை நேரில் பார்க்கும் போது நம் கட்சி நிலை தேர்தலில் இப்படியாகிவிட்டதே, மனதெல்லாம் கஷ்டமாக இருக்கிறது என்றேன். அதற்கு விடுங்கள் பார்த்து கொள்ளலாம் என்று சொல்லிவிட்டு, அப்போது என்னிடம் ஒரு வார்த்தை சொன்னார் " ஸ்டாலின் எல்லாம் எப்பேர்ப்பட்ட லீடர், அவரே வெற்றி வாய்ப்பை இழக்கும் அளவிற்கு மக்கள் ஓட்டு போடுகிறார்கள் என்றால் என்ன இது..இந்த மக்கள் என்ன தான் நினைக்கிறார்கள் என்று கேட்டுவிட்டு மனதார வருந்தினார். அரசியல் ரீதியாக எதிரிகளாக இருந்தாலும், நீண்ட கால அனுபவமுள்ள ஒரு தலைவர் தோல்வியடைந்தது வருத்தமளிக்கிறது என்று EPS தம்மிடம் தெரிவித்ததாக அவர் கூறினார். அரசியலில் இருவரும் வெவ்வேறு துருவங்களாக இருந்தாலும் மிகசிறந்த மற்றும் பெரிய அரசியல் தலைவர்கள் எல்லாம் வெற்றி பெற வேண்டும், அவர்களுக்கு இந்த நிலை வர கூடாது என்று வருத்தப்பட்டு பேசினார்.

இப்படிப்பட்ட தலைமைப் பண்பு உள்ளவர் தான் எங்கள் தலைவர் எடப்பாடியார் என்று கூறினார் .

## தவெகவை ஆட்சியமைக்கவிடாத ஆளுநரை கண்டித்து இன்று ஆர்ப்பாட்டம் – செல்வப்பெருந்தகை அறிவிப்பு!

*சென்னை, மே 08:*
தவெக ஆட்சி அமையக் கூடாது என்ற நோக்கத்துடன் செயல்படும் பாஜக, ஆளுநரைக் கண்டித்து நாளை மாவட்ட தலைநகரங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளதாக தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.



இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

"2025 தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக வெற்றிபெற்றுள்ள தமிழக வெற்றிக் கழகம் ஆட்சி அமைக்கக் கூடாது என்ற நோக்கத்துடன் இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிராக செயல்படும் மத்திய பாஜகவை கண்டித்தும், அவர்களில் கைப்பாவையாக செயல்படும் ஆளுநரை கண்டித்தும் மாவட்ட தலைநகரங்களில் இன்று காலை 11:00 மணிக்கு காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திட தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டிகள் சார்பாக அண்ண சாலை, தாராப்பூர் டவர் அருகில் நாளை காலை 11:00 மணியளவில் எனது தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர்கள், முன்னாள் மத்திய அமைச்சர்கள், அகில இந்திய காங்கிரஸ் செயலாளர்கள், மூத்த காங்கிரஸ் நிர்வாகிகள், நாடாளுமன்ற சட்டமன்ற இந்நாள், முன்னாள் காங்கிரஸ் உறுப்பினர்கள், சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், சர்க்கிள், வட்ட தலைவர்கள் மற்றும் அதன் நிர்வாகிகள், பெருநகர சென்னை மாமன்ற காங்கிரஸ் உறுப்பினர்கள், முன்னணி அமைப்புகள், துறைகள் மற்றும் பிரிவுகளின் தலைவர்கள் அதன் நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்பார்கள்.

திருப்பூர் ரியல் எஸ்டேட் விற்பனை
சிறந்த முதலீட்டு வாய்ப்பு
PREMIUM PLOT SALE
Tiruvallur to Oothukottai Highway NH on Rd Site
VGP THIRU NAGAR, PHASE-1
• Location: (Nr Mylapore Jn)
• Direction: N/ Face
• Total Area: 2400 sft
• Price: RS.650/sft
LIMITED PLOTS AVAILABLE!
Contact Us: 9445315510 / 9283257193
VGP Developers - Your Trusted Partner

டீலர்கள் தேவை
மைலேஜ் பூஸ்டர்
20% ~ 30%
மிக அதிகமான மைலேஜ் குறைந்த புகை சுலபமான வாகன ஓட்டம் குறையும் மாசு
நேரடி விற்பனையாளர்களும் டீலராகலாம்
Manufactured By: Dlag Technologies, Chennai 33
போன் 63746 73041

நிலம் தேவை
தெற்கு சென்னை
திருப்போரூர் to செங்கல்பட்டு ரோடு
1 to 2 ஏக்கர்
தொடர்புக்கு:
Ph. 6384617773

SUN SHINE PROPERTY
(Property & Developers)
லேவுவுட், நிலம் & ஷேரிங் டாக்குமெண்ட்ஸ் தேவை
மனை விற்பனை
• பொன்மார் • சித்தாலப்பாக்கம்
600, 850, 900 sqft
முகவரி: K.K. நகர் சென்னை - 78 | தொடர்புக்கு: PH.9840804617

Annai Violet Arts & Science College
(Affiliated to the University of Madras, Co-Ed | NAAC Accredited)
UG & PG COURSES
ADMISSIONS OPEN
Ph : 044-26861611 | 26864684 | 9344900911 | 6383425388

WANTED
IMMEDIATE OPENINGS AVAILABLE!
• HOUSEKEEPING STAFF (Male & Female)
• MARKETING EXECUTIVE - ELECTRICAL FIELD (Male & Female)
• ELECTRICIAN & HELPERS (Weekly / Monthly Wages)
• ELECTRICAL SUB-CONTRACTOR
DRIVER
GOOD SALARY | FLEXIBLE WORK OPTIONS | IMMEDIATE JOINING
CONTACT NOW: 9363133253
HURRY! LIMITED VACANCIES AVAILABLE!

சிங்கபெருமாள்கோயில்
S.P கோயில். On. GST Road
2 ஏக்கர் விற்பனை
1 ஏக்கர் 25cr
வண்டலூர் கேளம்பாக்கம் ரோடு
17 ஏக்கர் விற்பனை
1 acre 16 cr
Ph. 9566055082

EMI 50% 50% OFFER
PLOT FOR SALE
SITE NO: 2
SITE NAME: ஸ்ரீ நகர்
LOCATION: கருங்குழி, மேலாவலம்பேட்டை
SRI DEVELOPERS
LOCATION: ADAMBAKKAM, GUINDY.
OUR PROJECTS
SITE NAME: BHARATHI NAGAR
LOCATION: MULLI, MADHURANTHAGAM.
CONTACT US NOW FOR BOOKING!
PH. NO: 8220711499, 8870158259

முருகன் துணை
A.S.R
ரியல் எஸ்டேட்
காஞ்சிபுரம்
சுலப தவணை உள்ள வீட்டு மனைகள் வாங்க, விற்க மற்றும் பட்டா மாறுதல் பெயர் மாற்றம் செய்து தரப்படும்.
காஞ்சிபுரம், செய்யாறு உள்ள வீட்டு மனைகள் மற்றும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும்
அணுகவும்
7305025591, 9578622711

GREEN HOUSING & PROPERTIES
மண்ணும் பொன்னும்
சிறுசேமிப்பு திட்டம் 50 - 50 EMI
OFFER PRICE ரூபாய் ₹1.80 லட்சம்
800 SQFT
FREE FREE!!!
10 கிராம் GOLD COIN சேமியுங்கள்
VILLA PLOTS FOR SALE
BOOK NOW
+91 77083 95118

PLOTS FOR SALE
SRI DEVELOPERS
மனைகள் விற்பனைக்கு
கிண்டி
மதுராந்தகம், கருங்குழி, ஒரகடம், படப்பை
EMI Available
BANK LOAN Available
CONTACT: 8220711499, 8870158259

ePAPER PUBLISHING
WEBSITE / SOFTWARE
Publish | Manage | Deliver
Complete Solution for ePaper Publishing
COMPLETE ePAPER WEBSITE / SOFTWARE FOR JUST ₹2999/- PER YEAR
HOSTING Included | ADMIN PANEL Included | MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
CALL / WHATSAPP: 9040463899

JUST Xth PASS
JOB OPPORTUNITY
₹25,000/- PER MONTH *
All Taluks & Districts in ALL STATES in INDIA
FRESHERS CAN APPLY
ATTRACTIVE SALARY
GROWTH OPPORTUNITIES
SECURE YOUR FUTURE
APPLY NOW!
Call / WhatsApp: 8122664699
*Terms & Conditions Apply

WANTED
READYMADE SHOWROOM:
• Sales Man / Sales Girl
RESTAURANT :
• Briyani Master
• Chinese Master
• Atho Master
• Chef
• Helper
OTHER POSITIONS:
• Accounts
• Billing
• Internet Engineer
PLACE: T NAGAR, NAVALUR
CALL / WHAT'SAPP:
7550123560
6369528629

நிலம் தேவை
தெற்கு சென்னை
சென்னை
திருப்போரூர்
1 - 2 ஏக்கர்
செங்கல்பட்டு
திருப்போரூர்-செங்கல்பட்டு ரோடு
உடனடி தேவை!
தொடர்புக்கு
Ph: 6384617773

₹ 15000 - 21000 | Monthly
Full Time Job Apply, Fresh or Experienced,
100% Job Available Here. No registration fee, Direct Job,
Chennai, Tamilnadu,
• 12th to Graduate and Diploma/ITI Qualified and Other Degree Holders.
• Back Office,
• Data Entry,
• Tele Caller's,
• Field officer,
• Team management, Male/Female Both Can Apply,
Share your Resume with Photo to
77899 41009

WANTED
• LAB HELPER
• OFFICE BOY
• GARDENER
CHEMBARAMBAKKAM
CALL US 7550093245 / 7358696451

WANTED
Work From Home Opportunity
Telecallers Required
Also Hiring for IT Jobs
✓ Salary: ₹10,000 - ₹15,000
✓ Attractive Incentives
✓ Flexible Work From Home Option
Freshers & Experienced Both Can Apply
Contact Now:
9566072935

D.சக்திவேல்
9940374962

ADVERTISE WITH US
7789941009

PLOT FOR SALE
பொன்னேரி, திருவள்ளூர், கடம்பத்தூர் அருகில்
வீட்டு மனைகள் விற்பனைக்கு
BANK LOAN AVAILABLE
Contact: 9841495210

திருமுடிவாக்கம் அருகாமையில் அமைந்துள்ள சாரதா கம்பெனிக்கு
ஆட்கள் தேவை
ஆண்கள் மட்டும்
வயது: 18 முதல் 35 வரை
கல்வி தகுதி
10 முதல் any Degree
தங்கும் இடம் உணவு வசதி உண்டு
ESI , PF , Attendance Allowance போன்ற அனைத்து வசதிகளும் உண்டு
சம்பளம் :
18,000 முதல் 22,000 /-
தொடர்புக்கு :
9962400330 , 9962400319 , 9962400336
மெயில் : hrsarathagroup@gmail.com

WANTED
ELECTRICIAN SUPERVISOR / ELECTRICIAN
EGMORE, MOUNT ROAD
CALL US 7550093245 / 7358696451

WANTED
OFFICE BOY
GUINDY
CALL US 7550093245 / 7358696451

WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872

MATRIMONY WEBSITE/SOFTWARE
VIVAH | SHAADI | PELLI | KALYANAM
Find Your Perfect Life Partner
Trusted by Thousands, Chosen for a Lifetime
COMPLETE MATRIMONY WEBSITE FOR JUST ₹2999/- PER YEAR
HOSTING Included | ADMIN PANEL Included | MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
GET YOUR PROFESSIONAL MATRIMONY WEBSITE TODAY!
BEST PRICE BEST SOLUTION
CALL US 9040463899
WEBSITE www.matrimonyweb.in

## கவிதை அரங்கம்!





சொல்லத் துடிக்கும்
வார்த்தைகள் ஆயிரம்,

சொன்னால் தீர்ந்துவிடுமோ
இந்த மாயம்?

ஆயுள் முழுக்க உன் கை
கோர்த்து,

அழகான பயணங்கள்
போக ஆசை!

காலங்கள் மாறலாம் காட்சி
மாறலாம்,

காதல் மாறாது
உன்னிடத்தில் மட்டும்!

நூறு ஜென்மம் நான்
எடுத்தாலும்,

நூறிலும் நீயே என்
துணையாக வேண்டும்!

## வாழ்க்கை தத்துவம்...



அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

கற்க கசடற.

யாதும் ஊரே யாவரும் கேளிர்.

பணிவு உன்னை உயர்த்தும்.

சோம்பல் முன்னேற்றத்தின் முட்டுக்கட்டை.

பிறர் ரகசியத்தை உன் உயிராகக் காத்திடு.

பொய்மைக்கு ஆயுள் குறைவு.

கனவு காணுங்கள், அதை நனவாக்குங்கள்.

தோல்வியைத் தழுவக் கற்றுக்கொள்.

## "மகளின் கேள்வி.



"விஷ்பர் னா, என்ன மம்மி" ஆங்கிலப் பள்ளியில் படிக்கும் அஞ்சு வயசு மகள் கேட்ட கேள்வியால் திடுக்கிட்டுப்போனவள், காய்ந்த எண்ணெய்யில்கடுகுக்குப் பதிலாக வெங்காயத்தை போட்டு விட்டுத் தடுமாறினாள்.

"போய் லஞ்ச் பேக் டிபன்பாக்ஸ் எல்லாம் எடுத்துட்டு வா... அப்பாவுக்கும் ஒனக்கும் சாப்பாடு கட்டனும்" என்று மகளை விரட்டினாள்.

மகள் அசைவதாகத் தெரியவில் லை.

ஐயோ, இவளுக்கு நான் எப்படி சொல்லி புரிய வைப்பது...! எல்லாம் இந்த பாழாய்ப்போன டி.வி. விளம்பரத்தைப் பார்ப்பதால் வந்த வினை. அவர்களுக்குத் தான் எதை எதை விளம் பரம் செய்வது என்ற ஒரு வறைமுறையே கிடையாதே...! நல்லவேளை, அவர் கடைக்குப் போயிருக்கிறார். இல்லாவிட்டால் என் நிலமை தர்ம சங்கடமாயிருக்கும் என்று எண்ணிக் கொண்டிருக்கும் போதே, பால் பாக்கட்டுடன் அவரே வந்துவிட்டார்.

அப்பாவிடமே தனது கேள் வியைத் தூக்கிப் போட்டாள் மகள். நிலைமையை ஓரளவு புரிந்து கொண்டவர், "அம்மா சமைக்கனும் காப்பி போடனும்.... அவங்களை தொந்தரவு செய்யாதே, நீ வா நான் உனக்கு சொல்லித் தாரேன்" என்று மகளை அழைத்துக்கொண்டு தன் அறைக்குப் போக, மகள் அம்மாவுக்கு பழிப்பு காட்டியபடியே அப்பாவுடன் ஓடினாள்அவள்..

ஐயையோ இவர் என்ன சொல்லித் தொலைக்கப்போகிறாரோ என்று நினைத்தவள், பரபரப்பாய் ரசத்தை தாளித்து மூடி சிம்மில் வைத்தவாறே ஈரக் கைகளை இடுப்புப் புடவையில் துடைத்த படியே அறை வாசலில் போய் நின்று கவனித்தாள்.

"இப்ப...ரெண்டு திருடன்கள் ராத்திரியில திருடப் போகும்போது எப்படி பேசிப்பானுக செல்லம்."

"ம்ம்ம்...ரகசியமா, குசுகுசுன்னு பேசிப்பானுங்க டாடி" என்றாள் மகள்.

"வெரிகுட்...அப்படி ரகசியமா காதுக்குள்ளாற பேசிக்கிறத தான் 'விஸ்பர்னு' சொல்லு வாங்க"

"விஸ்பர்னு வர்ர மாதிரி ஒரு சென்டன்ஸ் சொல்லுங்க டாடி" என்றாள், மகள்,

"த டு தீவ்ஸ் வேர் டாக்கிங் இன் விஸ்பர்ஸ் என்று எழுதிக்க டியர்" என்றார் தந்தை.

மகளுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. "தாங்யு டாடி. அம்மாகிட்ட கேட்டா, திருதிருன்னு முழிக்கிறாங்களே ஏன் டாடி" என்றாள் மகள்.

முதலில், "பிரஸ்டீஜ்" என்றால் கௌரவம் என்றுதான் பொருள். நீங்க அதை குக்கர்னு நினைத்துக் குழம்பக் கூடாது" என்று வெளியே நிற்கும் மனைவிக்கும் கேட்கும்படியாகக் கூறினார் அவர்.



**குடந்தை பரிபூரணன்.**

## தினம் ஒரு சமையல்



### காளான் பிரியாணி

**தேவையான பொருட்கள்:**


பாசுமதி அரிசி அல்லது சீரகச் சம்பா - 2 கோப்பை
காளான் - 200 கிராம் (நறுக்கியது)
பெரிய வெங்காயம் - 2 (நீளமாக நறுக்கியது)
தக்காளி - 2 (நறுக்கியது)
இஞ்சி பூண்டு விழுது - 1 மேசைக்கரண்டி
பச்சை மிளகாய் - 3
புதினா, கொத்தமல்லி - ஒரு கைப்பிடி
தயிர் - 2 மேசைக்கரண்டி
மஞ்சள் தூள் - 1/4 தேக்கரண்டி
மிளகாய் தூள் - 1 தேக்கரண்டி
பிரியாணி மசாலா - 1 தேக்கரண்டி
பட்டை, கிராம்பு, ஏலக்காய், பிரியாணி இலை - தாளிக்க
நெய் மற்றும் எண்ணெய் - தேவையான அளவு
உப்பு - தேவையான அளவு



**செய்முறை:**

தயார் செய்தல்: அரிசியை 20 நிமிடம் ஊறவைக்கவும். காளானைச் சுத்தமாகத் துடைத்து நறுக்கிக் கொள்ளவும்.
தாளித்தல்: குக்கரில் எண்ணெய் மற்றும் நெய் ஊற்றி சூடானதும், பட்டை, கிராம்பு, ஏலக்காய், பிரியாணி இலை சேர்த்துத் தாளிக்கவும்.
வதக்குதல்: நறுக்கிய வெங்காயம் மற்றும் பச்சை மிளகாய் சேர்த்துப் பொன்னிறமாகும் வரை வதக்கவும். பின் இஞ்சி பூண்டு விழுது சேர்த்துப் பச்சை வாசனை போகும் வரை வதக்கவும்.
மசாலா சேர்த்தல்: தக்காளி, புதினா, கொத்தமல்லி சேர்த்துத் தக்காளி நன்கு மசியும் வரை வதக்கவும். இதனுடன் மஞ்சள் தூள், மிளகாய் தூள், பிரியாணி மசாலா மற்றும் தயிர் சேர்த்து வதக்கவும்.
காளான் சேர்த்தல்: நறுக்கி வைத்துள்ள காளானைச் சேர்த்து 2 நிமிடம் கிளறவும். காளானில் இருந்து தண்ணீர் வெளிவரும்.
வேகவைத்தல்: 2 கோப்பை அரிசிக்கு 3 கோப்பை தண்ணீர் (1:1.5 விகிதம்) ஊற்றி, தேவையான உப்பு சேர்க்கவும். தண்ணீர் கொதிக்க ஆரம்பித்ததும் ஊறவைத்த அரிசியைச் சேர்க்கவும்.
முடிவு: குக்கரை மூடி 2 விசில் விட்டு இறக்கவும். பிரஷர் குறைந்ததும் மெதுவாகக் கிளறி விடவும்.

## ஈச்சுரமூலி பயன்கள்



ஈச்சுரமூலி (ARISTOLOCHIA INDICA) என்பது பல்வேறு மருத்துவ குணங்களைக் கொண்ட ஒரு கொடி வகைத் தாவரமாகும். சித்த மருத்துவத்திலும், நாட்டு மருத்துவத்திலும் இது பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.
இதன் முக்கியப் பயன்கள் பின்வருமாறு:

1. விஷ முறிவு (ANTIVENOM)
ஈச்சுரமூலியின் மிக முக்கியமான பயன் விஷக்கடிகளை முறிப்பதாகும். குறிப்பாக பாம்பு மற்றும் தேள் கடிக்கு மருந்தாக இதன் இலைச்சாறு பயன்படுத்தப்படுகிறது. அதனால் தான் இதற்கு "பாம்புக்கொல்லி" என்ற பெயரும் உண்டு.

2. செரிமான மண்டலம்
பசியைத் தூண்ட: செரிமானக் கோளாறுகளைச் சரிசெய்து பசியை உண்டாக்க இதன் வேர் மற்றும் இலைகள் உதவுகின்றன.
வயிற்றுப் பூச்சிகள்: குடலில் உள்ள தேவையற்ற புழுக்களை வெளியேற்ற (DEWORMING) இதன் இலைச் சாறு மருந்தாகக் கொடுக்கப்படுகிறது.

3. தோல் நோய்கள்
தீராத சொறி, சிரங்கு மற்றும் படர்தாமரை போன்ற தோல் நோய்களுக்கு ஈச்சுரமூலி இலையை அரைத்துப் பூசி வந்தால் நல்ல பலன் கிடைக்கும். இது சிறந்த கிருமிநாசினியாகச் செயல்படுகிறது.

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



கேள்வி: ஒரு கொசு 'தற்கொலை' பண்ணிக்கணும்னா என்ன பண்ணும்?
பதில்: 'ஆல் அவுட்' (ALL OUT) குடிக்காது... அதுக்கு மேல ஏறி நின்னு குதிக்கும்!

நோயாளி: டாக்டர், எனக்கு ஒரு மாசமா தூக்கமே வரல.
டாக்டர்: சரி, நைட் படுக்கும்போது ஒரு 1000 வரைக்கும் எண்ணுங்க.
நோயாளி: 950 வரைக்கும் எண்ணுவேன் டாக்டர்... அதுக்குள்ள விடிஞ்சுடுது!



## "பார்லே-ஜி பிஸ்கட்டால் உயிர் வாழ்ந்தேன்" பேட்ட நடிகரின் உருக்கமான நினைவுகள்



பாலிவுட்டின் திறமையான நடிகர்களில் ஒருவராக திகழும் நவாசுத்தீன் சித்திக்கி, தனது ஆரம்ப கால போராட்டங்களை பற்றி மனதை உருக்கும் வகையில் பகிர்ந்துள்ளார். தமிழ் ரசிகர்களுக்கும் பரிச்சயமான இவர், பேட்ட திரைப்படத்தில் ரஜினிகாந்த் எதிரியாக நடித்திருந்தார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்ட பதிவில், "ஆரம்பத்தில் நமக்குள் தன்னம்பிக்கையும், நடிப்பின் மீது அளவற்ற காதலும் இருக்கும். ஆனால் தொடர்ந்து வரும் தோல்விகள், அந்த நம்பிக்கையை மெதுவாக உடைத்து விடும்.

ஒரு வாய்ப்பு கிடைத்துவிட்டது என்று மகிழ்ச்சியாக நண்பர்களிடம் சொல்லிவிடுவேன். ஆனால் படப்பிடிப்பு தொடங்கும் நேரத்தில் என்னை நீக்கிவிடுவார்கள். சில சமயம் அதைப் பற்றிக் கூட யாரும் தெரிவிக்க மாட்டார்கள். அந்த வேதனையில் தெருவோரத்தில் நின்று அழுதிருக்கிறேன். அதிலும், ஒரு நாளைக்கு மூன்று வேளையும் பார்லே-ஜி பிஸ்கட் மட்டும் சாப்பிட்டு வாழ்ந்த நாட்கள் இருக்கின்றன. இன்றும் அந்த பிஸ்கட்டை பார்க்கும்போது பழைய டெல்லி வாழ்க்கை நினைவுக்கு வருகிறது.." என்ற அவரது வார்த்தைகள் ரசிகர்களை நெகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இன்று தேசிய விருதுகள் வாங்கும் அளவுக்கு உயர்ந்துள்ள நவாசுத்தீன் சித்திக்கியின் இந்த பயணம், கனவுகளை விடாமல் பிடித்துக்கொண்டவர்களுக்கு ஒரு பெரிய உத்வேகமாக பார்க்கப்படுகிறது.

## சினிமா



சேலையில் ஹோம்லி லுக்கில் கயாடு லோஹர்.. அழகிய போட்டோ ஷூட்

## முதல் படத்திலேயே ரூ.85 கோடி கல்லா கட்டிய 'யூத்' நாயகனுக்கு குவியும் பட வாய்ப்புகள்..

தமிழ் சினிமாவில் புதிய முகமாக அறிமுகமாகி மிகக் குறுகிய காலத்திலேயே கவனம் ஈர்த்துள்ளவர் கென். அவர் இயக்கி, நடித்த 'யூத்' திரைப்படம் இந்த ஆண்டில் இதுவரை அதிக வசூல் செய்த தமிழ்ப்படமாக மாறி, ரூ.85 கோடி வரை வசூல் செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தமிழ் மட்டுமின்றி தெலுங்கிலும் நல்ல வரவேற்பைப் பெற்ற இந்த படம், ஓடிடியில் வெளியான பிறகும் பரவலாக பேசப்பட்டு வருகிறது.

தன் முதல் படத்திலேயே வித்தியாசமான கதைத் தேர்வு மற்றும் நடிப்பின் மூலம் ரசிகர்களிடம் வலுவான தாக்கத்தை ஏற்படுத்திய கென், தற்போது பலரின் கவனத்தையும் பெற்றுள்ளார். விமர்சகர்களும், ரசிகர்களும் அவரின் முயற்சியை பாராட்டி வருகின்றனர்.

இந்நிலையில், அவரது அடுத்த கட்டம் குறித்து பல கேள்விகள் எழுந்துள்ளன. அவர் மீண்டும் தானே இயக்கி நடிக்கப் போகிறாரா அல்லது மற்ற இயக்குநர்களின் படங்களில்



நடிக்கிறாரா என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. இதற்கிடையில், தமிழ் சினிமாவின் பல முன்னணி தயாரிப்பு நிறுவனங்கள் அவரை அணுகி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும், கென்னை வைத்து சுமார் ரூ.30 கோடி பட்ஜெட்டில் புதிய திரைப்படம் தயாரிக்க தயாராக உள்ளனர் என்றும் கூறப்படுகிறது. இளம் தலைமுறைக்கு ஏற்ற கதைகளில் கென் போன்ற புதிய நடிகர்கள் முக்கிய இடத்தைப் பிடிப்பார்கள் என்ற நம்பிக்கை ரசிகர்களிடையே உருவாகியுள்ளது. சில முன்னணி நடிகர்களும் அவருடன் இணைந்து பணியாற்ற ஆலோசனை வழங்கி வருவதாக கூறப்படுகிறது.


ULTRA SEC FACILITY FORCE
YOUR SAFETY, OUR COMMITMENT
OUR SERVICES
Security Services
(Trained Security Guards, Supervisors, 24x7 Coverage)
Facility Management Services
(Housekeeping, Maintenance, Cleaning)
Manpower Supply
(Skilled & Unskilled Stafffor Industries, Apartments, Offices
WHY CHOOSE US?
Experienced & Professional Team
24/7 Reliable Support
Affordable & Transparent Pricing
Customized Service Plans
ULTRA SEC FACILITY FORCE
Flat No : 13A, Door No: 1,
Moovarasampet Main Road,
Madipakkam, Chennai-600091.
+91 93632 98980
ultrasecfacility@gmail.com
www.ultrasecfacility.com


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


ePAPER PUBLISHING
WEBSITE / SOFTWARE
Publish | Manage | Deliver
Complete Solution for ePaper Publishing
Daily ePaper
Archive Management
Subscription & Free Access
Google Ads Integration
Upload PDF & Publish
Mark, Crop, Cut & Share
Share on Social Media
COMPLETE ePAPER WEBSITE / SOFTWARE
FOR JUST
₹2999/-
PER YEAR
DAILY NEWS
HOSTING Included
ADMIN PANEL Included
MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
CALL / WHATSAPP:
9040463899


ADVERTISE
WITH
US
7789941009


TOURS & TRAVELS AGENCY
WEBSITE / SOFTWARE
BOOK | MANAGE | GROW
All-in-One Solution to Grow Your Travel Business Online
COMPLETE TOURS & TRAVELS AGENCY WEBSITE
FOR JUST
₹2999/-
PER YEAR
HOSTING Included
ADMIN PANEL Included
MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
Tour Packages
Hotel Booking
Flight Booking
Bus Booking
Car Rental
Cruise Booking
Custom Packages
Payment Gateway
Enquiry Management
Trip Itinerary
Offers & Discounts
Blog Management
User Registration
Reviews & Ratings
Multi Currency
Multi Language
Email / SMS Notifications
Mobile Responsive
Gallery Management
Destination Management
SEO Friendly
Reports & Analytics
Role Management
Social Media Integration
PROFESSIONAL DESIGN
EASY TO MANAGE
SECURE & RELIABLE
GROW YOUR BUSINESS
CALL / WHATSAPP:
9040463899


REAL ESTATE AGENT
WEBSITE / SOFTWARE
LIST | SHOWCASE | CONNECT | GROW
Everything You Need to Grow Your Real Estate Business Online
COMPLETE REAL ESTATE WEBSITE / SOFTWARE
FOR JUST
₹2999/-
PER YEAR
HOSTING Included
ADMIN PANEL Included
MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
Property Listing
Advanced Search & Filter
Property Details
Google Map Integration
Image & Video Gallery
Inquiry & Lead Management
Agent Profiles
User Registration
Compare Properties
Favorites Listing
Blog & News
SEO Friendly
Mobile Responsive
Social Media Integration
Email / SMS Notification
Advanced Dashboard
Reports & Analytics
Secure & User Friendly
PROFESSIONAL DESIGN
EASY TO MANAGE
SECURE & RELIABLE
BOOST YOUR BUSINESS
CALL / WHATSAPP
9040463899


CRYPTO BASED MLM WEBSITES
PROFESSIONAL • SECURE • POWERFUL
FOR
Rs. 25000/-
ONLY
ANY MLM CRYPTO PLAN
Decentralised
ROI Plans
Helping Plans
Level Plans
Binary Plans
Compensation Plans
Generation Plans
and Many More...
CRYPTO MLM
SECURE & RELIABLE
DECENTRALISED PLATFORM
GROW YOUR BUSINESS
FREE SUPPORT & UPDATES
Call/Whatsapp:
7436914247


JOB PLACEMENT AGENCY
WEBSITE / SOFTWARE
CONNECTING TALENT, CREATING OPPORTUNITIES
COMPLETE JOB PLACEMENT AGENCY WEBSITE
FOR JUST
₹2999/-
PER YEAR
HOSTING Included
ADMIN PANEL Included
MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
Job Listings Management
Advanced Job Search
Candidate Registration
Resume Upload
Employer Registration
Employer Dashboard
Job Application System
Shortlist Candidates
Interview Management
Email / SMS Notifications
Blog & News
Locations Management
Job Categories Management
Resume Database Search
Contact & Inquiry Management
Reports & Analytics
SEO Friendly
Mobile Responsive
PROFESSIONAL DESIGN
EASY TO MANAGE
SECURE & RELIABLE
GROW YOUR BUSINESS
CALL / WHATSAPP
9040463899


LIVE
NEWS PORTAL WEBSITE / SOFTWARE
FAST | RELIABLE | DYNAMIC
Powerful Solution for Digital News & Media Business
COMPLETE NEWS PORTAL WEBSITE
FOR JUST
₹2999/-
PER YEAR
HOSTING Included
ADMIN PANEL Included
MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
Unlimited News Categories
Article & News Management
Breaking News Ticker
Multi Author System
Front-end News Submission
Featured News
Advanced Search
Comment & Engagement
Image & Video Gallery
Live TV / Radio Integration
Email / SMS Notifications
Social Media Integration
Advertisement Management
SEO Friendly
User Management
Role & Access Control
Reports & Analytics
Mobile Responsive
PROFESSIONAL DESIGN
EASY TO MANAGE
SECURE & RELIABLE
GROW YOUR AUDIENCE
CALL / WHATSAPP:
9040463899


WE PROMOTE YOUR BUSINESS
THROUGH
DIGITAL MARKETING & ADVERTISING
GROW YOUR BUSINESS
TARGETED STRATEGIES
Reach the Right Audience
MAXIMUM RESULTS
Drive Traffic & Increase Sales
MEASURABLE GROWTH
Track. Analyze. Grow
OUR SERVICES
SOCIAL MEDIA MARKETING
SEARCH ENGINE OPTIMIZATION (SEO)
PAY PER CLICK ADVERTISING
CONTENT MARKETING
EMAIL MARKETING
ONLINE REPUTATION MANAGEMENT
ONLY
RS.499/-
LIMITED TIME OFFER!
EXPERT TEAM
Dedicated Professionals
FAST & EFFECTIVE
Quick Execution, Better Results
AFFORDABLE
Quality Service at Best Price
100% SUPPORT
We're With You Every Step
GET STARTED TODAY!
LET'S TAKE YOUR BUSINESS TO NEW HEIGHTS


Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E.Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009
WhatsApp: 7789951009


WANTED
ELECTRICIAN SUPERVISOR
/
ELECTRICIAN
EGMORE, MOUNT ROAD
CALL US
7550093245 / 7358696451

# புதிய ஆதார் செயலி பதிவிறக்கம் 2 கோடியை தாண்டியது




புதுடெல்லி, மே 8:

புதிய ஆதார் செயலி, 3 மாதங்களுக்குள் 2 கோடியே 10 லட்சத்துக்கும் அதிகமான பதிவிறக்கங்களுடன், மக்களிடையே வலுவான வரவேற்பைப் பெற்றுள்ளது. மக்கள் ஆதார் செயலியை பயன்படுத்தி, செல்போன் எண் மற்றும் முகவரி புதுப்பிப்புகள் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை எப்போதுவேண்டுமானாலும், எங்கிருந்தும் இதில் எளிதாக பெற்றுக்கொள்ளலாம்.

இதுவரை 28 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் புதிய ஆதார் செயலியை பயன்படுத்தி தங்களது செல்போன் எண்களை புதுப்பித்துள்ளனர். அதேபோல், ஏறத்தாழ 6 லட்சம் மக்கள் இந்த செயலியை பயன்படுத்தி தங்களது முகவரியை புதுப்பித்துள்ளனர்.

இந்த புதிய செயலியில் பல்வேறு வசதிகள் உள்ளன. இது 'ஆண்ட்ராய்டு' மற்றும் 'ஆப்பிள் ஐ.ஓ.எஸ்.' ஆகிய 2 இயங்கு தளங்களிலும் கிடைக்கிறது என்றும், மக்கள் அதனை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என்றும் மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் தெரிவித்து உள்ளது.

# ஒரே வீட்டில் 2 மக்கள் பிரதிநிதிகள்: கணவர் எம்.பி., மனைவி எம்.எல்.ஏ





திருவனந்தபுரம், மே 8:

கேரள சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியை பிடித்துள்ளது. இந்த தேர்தலில் பாலக்காடு மாவட்டத்தில் உள்ள கோங்காடு தொகுதியில் காங்கிரஸ் சார்பில் துளசி என்ற பெண் வேட்பாளர் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதே தொகுதியில் எம்.எல்.ஏ.வாக இருந்த மா.கம்யூனிஸ்டு வேட்பாளர் சாந்தகுமாரியை 3,706 வாக்குகள் வித்தியாசத்தில் அவர் வீழ்த்தியுள்ளார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி வலுவான நிலையில் இருந்த தொகுதியில் காங்கிரஸ் வென்றிருப்பது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. இதில் என்ன சுவாரசியம் என்றால் துளசியின் கணவர் வி.கே. ஸ்ரீகண்டன் பாலக்காடு தொகுதி எம்.பி.யாக உள்ளார். மனைவி வெற்றி பெற்றதன் மூலம் ஒரே வீட்டில் 2 மக்கள் பிரதிநிதிகள் இடம் பெற்றுள்ளனர்.

# காவல் நிலையத்தில் சாவியை விழுங்கிய வாலிபர்: 10 கிலோ வாழைப்பழங்களை சாப்பிட வைத்து வெளியே எடுத்த ருசிகரம்




பெங்களூரு, மே 8:

கர்நாடக மாநிலம் பல்லாரி மாவட்டத்தை சேர்ந்தவர் கார்த்திக்(எ) ராமு (வயது 23). இவர் பெங்களூருவில் தங்கியிருந்து வேலை செய்து வந்தார். மாதநாயக்கனஹள்ளி பகுதியில் தங்கியிருந்த அவர் அதே பகுதியை சேர்ந்த 17 வயது சிறுமியை காதலித்து வந்துள்ளார். இந்த காதலை அறிந்த சிறுமியின் பெற்றோர், கார்த்திக்கை கண்டித்துள்ளனர். இந்த நிலையில் சிறுமியை அழைத்துக்கொண்டு கார்த்திக் சொந்த ஊருக்கு சென்றுவிட்டார். இதனால் சிறுமியின் பெற்றோர், தங்களது மகளை கார்த்திக் கடத்திச் சென்றுவிட்டதாக மாதநாயக்கனஹள்ளி போலீசில் புகார் அளித்தனர்.

அதைத் தொடர்ந்து பல்லாரியில் பதுங்கியிருந்த 2 பேரையும் போலீசார் மீட்டு பெங்களூருவுக்கு அழைத்து வந்தனர். பின்னர் கார்த்திக்கை போலீசார் மாதநாயக்கனஹள்ளி காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தினர். அப்போது தன் மீது போலீசார் 'போக்சோ' வழக்கு பதிவு செய்து கைது நடவடிக்கை எடுத்து விடுவார்கள் என பயந்து, கையில் இருந்த லாக்கர் சாவியை (சிறிய சாவி) திடீரென்று வாயில் போட்டு விழுங்கி தற்கொலைக்கு முயன்றார். இதை பார்த்து அதிர்ச்சியடைந்த போலீசார், உடனே கார்த்திக்கை மீட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.

அங்கு அவருக்கு டாக்டர்கள் முதலில் மருத்துவ பரிசோதனை செய்தனர். அதில் கார்த்திக் விழுங்கிய சாவி தொண்டையில் சிக்காமல் வயிற்றில் சிக்கி இருப்பதை கண்டறிந்தனர். இதனால் வயிற்றுக்குள் கிடந்த சாவியை மீட்க வாழைப்பழங்களை சாப்பிட கொடுக்கும்படியும், இவ்வாறு செய்தால், அந்த சாவி இயற்கை உபாதை மூலம் வெளியே வந்துவிடும் என்றும் டாக்டர்கள் போலீசாரை அறிவுறுத்தினர்.

அதன்படி போலீசாரும் கார்த்திக்கை வலுக்கட்டாயப்படுத்தி வாழைப்பழங்களை சாப்பிட வைத்துள்ளனர். மொத்தம் 10 கிலோ வாழைப்பழங்களை போலீசார் அவரை சாப்பிட வைத்துள்ளனர். அதன்பிறகு இயற்கை உபாதை மூலம் கார்த்திக் விழுங்கிய சாவி வெளியே வந்தது. இதனால் போலீசார் நிம்மதி பெருமூச்சுவிட்டனர்.

# மேற்கு வங்காளம்: தேர்தலுக்கு பிந்தைய வன்முறையில் 2 பேர் பலி; 433 பேர் கைது

கொல்கத்தா, மே 8:

மேற்கு வங்காளத்தில் சமீபத்தில் 2 கட்டங்களாக நடந்து முடிந்த தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை 4-ந்தேதி நடந்து முடிந்தது. அதன் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நிலையில், தேர்தலுக்கு பின்னர் வன்முறை எதுவும் ஏற்படாமல் தடுக்கும் வகையில், மேற்கு வங்காள தலைமை செயலாளர், டி.ஜி.பி. மற்றும் மத்திய ஆயுத படைகள் உறுதி செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டு உள்ளது.

இந்நிலையில், தேர்தலுக்கு பின்பு நடந்த வன்முறையில் 2 பேர் பலியாகி உள்ளனர். தேர்தலுக்கு பிந்தைய வன்முறை தொடர்பாக மொத்தம் 200 எப்.ஐ.ஆர்.கள் பதிவு செய்யப்பட்டு உள்ளன. 433 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர். இதேபோன்று, 1,100 பேர் தடுப்பு காவலில் வைக்கப்பட்டு உள்ளனர் என டி.ஜி.பி. சித் நாத் குப்தா கூறியுள்ளார்.

மே 4-ந்தேதிக்கு பின்னரும், தேர்தலுக்கு பிந்தைய வன்முறையை தடுக்கும் நோக்கில், மத்திய ஆயுத படைகளை சேர்ந்த 500 கம்பெனி படையினர் குவிக்கப்பட்டு உள்ளனர். தேர்தல் ஆணையம் அடுத்த உத்தரவு பிறப்பிக்கும் வரை அவர்கள் தொடர்ந்து பணியில் ஈடுபடுவார்கள்.

இந்த நிலையில், மேற்கு வங்காளத்தில் பா.ஜ.க. தலைவர் சுவேந்து அதிகாரியின் தனி உதவியாளராக செயல்பட்டு வந்த சந்திரா என்பவரை மர்ம நபர்கள் சுட்டு படுகொலை செய்துள்ளனர். சமீபத்தில் நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் பவானிபூர் தொகுதியில் முதல்-மந்திரி மம்தா பானர்ஜி போட்டியிட்டார்.

அவரை சுவேந்து அதிகாரி வீழ்த்தினார். இதில் சுவேந்துக்கு ஆதரவாக தீவிர பணியாற்றியவர் சந்திரா. இதனால், சுவேந்து அதிகாரி வரலாற்று வெற்றியை பெற்றார். இந்த சூழலில், சந்திரா சுட்டு கொல்லப்பட்டு உள்ளார். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# டெல்லி: 'தினந்தோறும் சராசரியாக 497 வழக்குகள்' ?

புதுடெல்லி, மே 8:

இந்தியாவில் நடைபெறும் குற்றங்கள் தொடர்பாக தேசிய குற்றப் பதிவுப் பணியகம் (NCRB) வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையின்படி, திருட்டு சம்பவங்கள் தொடர்பான புள்ளிவிவரங்களில் டெல்லி முதல் இடத்தில் இருப்பது தெரியவந்துள்ளது. அங்கு ஒரு நாளைக்கு சுமார் 497 திருட்டு வழக்குகள் பதிவாகியுள்ளன.

2024-ம் ஆண்டில் டெல்லியில் 1,80,973 திருட்டு வழக்குகள் பதிவாகியுள்ளன. இதன் விளைவாக, வாரத்திற்கு கிட்டத்தட்ட 3,480 வழக்குகளும், ஒரு நாளைக்கு ஏறத்தாழ 497 வழக்குகளும் பதிவாகியுள்ளன. இது தேசிய மொத்த எண்ணிக்கையில் 73.3 சதவீதமாகும். இது இந்தியாவில் உள்ள மற்ற பெருநகரங்களை விட அதிகமாகும்.

இதனால் இந்தியாவில் திருட்டு சம்பவங்களின் தலைநகராக டெல்லி மாறிக்கொண்டிருக்கிறதா? என்ற கேள்வி எழுந்துள்ளது. மேலும், இந்த அறிக்கையின்படி, மும்பை 10,854 திருட்டு வழக்குகளுடனும் (4.4 சதவீதம்), பெங்களூரு 9,229 திருட்டு வழக்குகளுடனும் (3.7 சதவீதம்) மற்றும் ஜெய்ப்பூர் திருட்டு 9,051 வழக்குகளுடனும் (3.7 சதவீதம்) அடுத்தடுத்த இடங்களில் பதிவாகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

# துப்புரவுப் பணிகளில் அலட்சியம் காட்டினால் கடும் நடவடிக்கை: டெல்லி மேயர் எச்சரிக்கை



புது டெல்லி, மே 8:

டெல்லி மேயர் பிரவேஷ் வாஹி அனைத்து மண்டல துணை ஆணையர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். இக்கூட்டத்தில் அவர் கூறியதாவது:-

'நகரத்தின் தூய்மையை மேம்படுத்த பயனுள்ள செயல் திட்டத்தை உருவாக்குமாறு வலியுறுத்திய அவர், துப்புரவுப் பணிகளுக்கே தனது முன்னுரிமை எனத் தெரிவித்தார். துப்புரவுப் பணிகளில் எந்தவிதமான மெத்தனப்போக்கும் சகித்துக்கொள்ளப்படாது என தெரிவித்துள்ளார்.

மேலும், தூய்மைப் பணிகள் திருப்திகரமாக இல்லாத பகுதிகளில், சம்பந்தப்பட்ட தனியார் கழிவு மேலாண்மை முகமைகள் (Waste Management Agencies) மீது பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் சுகாதார மேற்பார்வையாளர்கள் மற்றும் உதவி சுகாதார ஆய்வாளர்கள் களத்தில் தங்கி பணிகளை நேரடியாகக் கண்காணிக்கபட வேண்டும் எனவும் குறிப்பிட்டார். அப்போதுதான் தரைமட்டத்தில் உண்மையான மாற்றம் தெரியும் என்று கூறினார். மேலும், சிறப்பாகப் பணியாற்றும் துப்புரவுப் பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை மற்றும் வெகுமதிகள் வழங்கப்படும் என்றும் பணியாளர்கள் அனைவரும் கட்டாயம் சீருடை அணிய வேண்டும் என்றும் தெரிவித்தார்.

டெல்லிகாவல்துறையின் உதவியுடன் ஆக்கிரமிப்புகளை அகற்றவும், சட்டவிரோத இறைச்சிக் கடைகள் மற்றும் அனுமதியற்ற பால் பண்ணைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். மேலும் முதல்-மந்திரி ரேகா குப்தாவின் தலைமையின் கீழ் டெல்லியை சுத்தமாகவும் அழகாகவும் மாற்றுவதே தங்கள் இலக்கு என்றும் இதற்காக அதிகாரிகள் அனைவரும் முழு அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும்' என்று கூறினார்.

# 'வாக்குத் திருட்டு' புகார், மம்தா பானர்ஜியின் குற்றச்சாட்டுகளைப் பிரதிபலிப்பக்கிறது: ராகுல் காந்தி விமர்சனம்

புதுடெல்லி, மே 8:

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தனது எக்ஸ் சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது: சில நேரங்களில் இடங்களைக் கைப்பற்றவும், சில நேரங்களில் ஒட்டுமொத்த அரசுகளையே கவிழ்க்கவும் வாக்குகள் திருடப்படுகின்றன.

மக்களவையில் உள்ள 240 பாஜக எம்.பி.க்களில், தோராயமாக ஒவ்வொரு 6-வது எம்.பி.யும் (6-ல் ஒருவர்) வாக்குத் திருட்டு மூலமே வெற்றி பெற்றுள்ளார். அவர்களைக் கண்டறிவது கடினமல்ல.

பாஜக பாணியிலேயே அவர்களை 'ஊடுருவல்காரர்கள்' என்று அழைக்கலாமா ? ஹரியானாவைப் பொறுத்தவரை, அங்குள்ள ஒட்டுமொத்த அரசாங்கமே ஊடுருவல் காரர்கள்தான்.

அவர்கள் தங்கள் பாக்கெட்டில் வைத்திருக்கும் நிறுவனங்கள், வாக்காளர் பட்டியல்கள் மற்றும் தேர்தல் நடைமுறைகளில் முறைகேடு செய்பவை. அவையே 'ரிமோட் கண்ட்ரோல்' மூலம் இயக்கப்படுகின்றன. உண்மையைக் கண்டுதான் அவர்களுக்குப் பயம். ஏனெனில், நியாயமான முறையில் தேர்தல் நடத்தப்பட்டால், அவர்களால் இன்று 140 இடங்களைக் கூட வெல்ல முடியாது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

மேற்கு வங்க பேரவைத் தேர்தலில் பாஜக 100-க்கும் மேற்பட்ட இடங்களை கொள்ளையடித்துவிட்டதாக மம்தா குற்றம்சாட்டி உள்ளார். மேலும், தேர்தல் ஆணையத்தை பாஜகவின் ஆணையம் என்று விமர்சித்த அவர், இந்த வெற்றியை ஒழுக்கமற்றது மற்றும் சட்டவிரோதமானது என்று குறிப்பிட்டார்.

இந்நிலையில், ராகுல் காந்தியின் 'வாக்குத் திருட்டு' புகார், மம்தா பானர்ஜியின் குற்றச்சாட்டுகளைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. மேற்கு வங்கத்தில் திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் தோல்வியைக் கொண்டாடுவதைத் தவிர்க்குமாறு ராகுல் காந்தி தனது கட்சி பிரமுகர்கள் மற்றும் பிற எதிர்க்கட்சித் தலைவர்களை எச்சரித்த மறுநாளே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# தொடர் விடுப்பு எடுத்த 51 அரசு மருத்துவ கல்லூரி டாக்டர்கள் பணிநீக்கம்: ஆந்திர அரசாங்கம் அதிரடி

அமராவதி, மே 8:

ஆந்திராவில் உள்ள மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் உரிய அனுமதியின்றி கல்லூரி டாக்டர்கள் மற்றும் பேராசிரியர்கள் தொடர்ந்து விடுப்பு எடுத்து வருவதாக ஆந்திர அரசாங்கத்துக்கு புகார் அளிக்கப்பட்டது. இதுகுறித்து உரிய விசாரணை மேற்கொள்ள வலியுறுத்தி மருத்துவக் கல்வி இயக்குனரகத்துக்கு அந்த மாநிலத்தின் சுகாதாரத்துறை மந்திரி சத்யகுமார்யாதவ் உத்தரவிட்டார். அதன்பேரில் மாநிலம் முழுவதும் உள்ள அரசுமருத்துவக்கல்லூரிகளில் இருந்து மருத்துவக் கல்வி இயக்குனரக அதிகாரிகள் தகவல்களை சேகரித்து, அனுமதியின்றி பணிக்குவராத மருத்துவர்களின் பட்டியலைத் தயாரித்தனர்.

இதனை தொடர்ந்து மருத்துவக் கல்வி இயக்குனரகத்தின் கீழ் பணியாற்றிய 51 டாக்டர்கள் அனுமதி இல்லாமல் பணிக்கு வராததால் நிரந்தரமாக பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். இதுகுறித்து சுகாதாரத்துறை அமைச்சகம் அதிகாரப்பூர்வமாக தெரிவித்துள்ளது. பணி நீக்கம் செய்யப்பட்டவர்களில் 8 இணைப் பேராசிரியர்கள், 41 உதவி பேராசிரியர்கள், 2 தொழில்பயிற்சிபயிற்றுனர்கள் அடங்குவர். இதுகுறித்து சுகாதாரத்துறை மந்திரி சத்யகுமார்யாதவ் அளித்த பேட்டியில், "விளக்கக் கடிதங்கள் வழங்கப்பட்டு பதில் அளிக்க போதிய நேரம் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும், சம்பந்தப்பட்ட டாக்டர்கள் இடமிருந்து எந்த பதிலும் வராததால் பணிநீக்கம் நடவடிக்கை எடுக்கப்பட்டது" என அவர் கூறினார்.

பணி நீக்கம் செய்யப்பட்ட 8 இணைப் பேராசிரியர்களில் ஒருவரான ஆந்திரா மருத்துவ கல்லூரி டாக்டர், கடந்த 2020-ம் ஆண்டு பிப்ரவரி 7-ம் தேதி முதல் பணிக்கு வரவில்லை என்றும், மற்றொருவரான உதவி பேராசிரியர் 2022 ஆகஸ்டு 22-ம் தேதி முதல் பணிக்கு வரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பணிநீக்கம் செய்யப்பட்ட பெரும்பாலான டாக்டர்கள் கடப்பா, அனந்தபூர், ஓங்கோல், திருப்பதி, விஜயவாடா, காக்கிநாடா, விசாகப்பட்டினம் ஆகிய இடங்களில் உள்ள மருத்துவக் கல்லூரிகளைச் சேர்ந்தவர்கள் என செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

ஒரு ஆண்டுக்கு குறைவாக பணிக்கு வராமல் இருந்த 11 டாக்டர்கள் மீது குற்றப்பத்திரிகைகள் வழங்கப்பட்டதையடுத்து அவர்கள் மீண்டும் பணியில் சேர்ந்துள்ளனர். மேலும் 33 டாக்டர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும் பணிவிடுப்பு ஒரு ஆண்டை கடந்தால், அவர்களுக்கும் பணி நீக்கம் செய்யப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பயணிகள் எண்ணிக்கை குறைந்த நிலையில்... மத்திய பிரதேச மெட்ரோவின் புதிய முயற்சி

இந்தூர், மே 8:

மத்திய பிரதேசத்தின் போபால் மற்றும் இந்தூரில் மெட்ரோ ரெயில்கள் இயக்கப்படுகின்றன. இந்த மெட்ரோ ரெயில்களில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கை எதிர்பார்த்த அளவைவிட குறைவாக உள்ளது. எனவே, பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், மக்களிடையே மெட்ரோ ரெயில் பயணம் குறித்த ஆர்வத்தை தூண்டும் வகையிலும் மெட்ரோ ரெயில் நிர்வாகம் புதிய முன்முயற்சியை மேற்கொண்டுள்ளது.

'சக்கரங்களில் கொண்டாட்டங்கள்' எனும் இந்த முயற்சியின் கீழ், மெட்ரோ ரெயில் பெட்டிகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட ரெயில் நிலைய வளாகத்தில் கட்டண அடிப்படையில் பொது நிகழ்ச்சிகள் மற்றும் பல்வேறு ஆக்கப்பூர்வமான மற்றும் சமூக நிகழ்ச்சிகள் நடத்த அனுமதிக்கப்படும் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது

"இந்தூர் மற்றும் போபாலின் துடிப்பான கலாச்சாரம், வேகமாக வளர்ந்து வரும் நகர்ப்புற சூழல் மற்றும் குடிமக்களின் மாறிவரும் வாழ்க்கை முறைகளை கருத்தில் கொண்டு இந்த முயற்சி தொடங்கப்பட்டுள்ளது," என்று மெட்ரோ நிர்வாக இயக்குனர் எஸ். கிருஷ்ணசைதன்யா கூறினார்.

மெட்ரோ ரெயில்கள் மற்றும் ரெயில் நிலைய வளாகங்களில் திரைப்பட படப்பிடிப்புகள், இணைய தொடர்கள், ஆவணப்படங்கள், விளம்பர தயாரிப்புகள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள், திருமணத்திற்கு முந்தைய புகைப்பட பதிவுகள், ஒளிப்பதிவு மற்றும் பிற ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளுக்கு அனுமதி வழங்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரெயில் நிலையத்தில் நிற்கும் ஒரு மெட்ரோ பெட்டிக்கு மணிக்கு ரூ. 5,000 கட்டணமும், இயங்கிக்கொண்டிருக்கும் ரெயில்களில் ஒரு பெட்டிக்கு மணிக்கு ரூ. 7,000 கட்டணமும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் குறிப்பிட்டனர். பிறந்தநாள் கொண்டாட்டங்கள், திருமணத்திற்கு முந்தைய புகைப்படப் பதிவுகள் போன்ற நிகழ்ச்சிகளுக்கு அதிகபட்சமாக 50 நபர்கள் வரை அனுமதிக்கப்படுவர் என்றும், கூடுதல் நபர்களுக்கான கட்டணங்கள் மாறுபடும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்."

பொதுமக்கள் தாங்கள் நடத்தவிருக்கும் நிகழ்ச்சிகளுக்காக, ஒவ்வொரு மெட்ரோ பெட்டிக்கும் ரூ. 20,000 பிணை தொகையாக செலுத்த வேண்டும்.

நிகழ்ச்சி முடிந்த பிறகு, மெட்ரோவின் விதிமுறைகள் முறையாக பின்பற்றப்பட்டிருந்தால், அந்தத் தொகை மீண்டும் திரும்ப தரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பா.ஜ.க. தலைவர் சுவேந்து அதிகாரியின் தனி உதவியாளர் சுட்டுக்கொலை



கொல்கத்தா, மே 8:

மேற்கு வங்காளத்தில் பா.ஜ.க. தலைவர் சுவேந்து அதிகாரியின் தனி உதவியாளராக செயல்பட்டு வந்த சந்திரா என்பவரை மர்ம நபர்கள் சுட்டு படுகொலை செய்துள்ளனர்.

அவரை மத்தியாகிராம் பகுதியில் வைத்து, மர்ம நபர்கள் சிலர் துப்பாக்கியால் சுட்டு விட்டு தப்பி சென்றனர். இதில் அவருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. உடனடியாக அவர் மீட்கப்பட்டு, சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டார்.

எனினும், அதில் பலனின்றி அவர் உயிரிழந்து விட்டார். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

சமீபத்தில் நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் பவானிபூர் தொகுதியில் முதல்-மந்திரி மம்தா பானர்ஜி போட்டியிட்டார். அவரை சுவேந்து அதிகாரி வீழ்த்தினார்.

இதில் சுவேந்துக்கு ஆதரவாக தீவிர பணியாற்றியவர் சந்திரா. இதனால், சுவேந்து அதிகாரி வரலாற்று வெற்றியை பெற்றார். இந்த சூழலில், சந்திரா சுட்டு கொல்லப்பட்டு உள்ளார்.




## கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் தவெக இளைஞர் மீது தாக்குதல்

**சென்னை, மே.08:** தவெக இளைஞர் மீது தாக்குதல் நடத்தியதாக இருவரை போலீஸார் கைது செய்து விசாரிக்கின்றனர்.

சென்னை ஓட்டேரி எஸ்.எஸ்.புரம் பகுதியைச் சேர்ந்தவர் சாலமன் (26) தவெக உறுப்பினர் என கூறப்படுகிறது. இவர் தனது உறவினரை நேற்று முன்தினம், கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். அப்போது சாலமனின் செல்போனுக்கு அழைப்பு வந்தது. அதில் விஜய் நடித்த திரைப்பட பாடல் ரிங்டோனாக ஒலித்தது.

அப்போது, அங்கு வந்த இருவர், சாலமனிடம், "ஏன் விஜய் பாடலை ரிங்டோனாக வைத்துள்ளாய்?" என கேட்டு தகராறு செய்ததாக கூறப்படுகிறது. இதனால் இருதரப்புக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. ஆத்திரமடைந்த போதை ஆசாமிகள் இருவரும் சாலமனை தாக்கி உள்ளனர்.

சம்பவம் குறித்து சாலமன் அளித்த புகாரின் பேரில் கீழ்ப்பாக்கம் போலீஸார் நடத்திய விசாரணையில், தாக்குதலில் ஈடுபட்டவர்கள் சேத்துப்பட்டு பகுதியைச் சேர்ந்த அம்பேத்கர் (35) மற்றும் செந்தில்குமார் (40) என்பது தெரியவந்தது. இதில், அம்பேத்கர் திமுக ஆதரவாளர் எனவும் செந்தில்குமார் நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றி வருவதாக கூறப்படுகிறது. போலீஸார் இருவரையும் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

## தர்மபுரி அருகே பயங்கரம்; காதல் ஜோடிகளுக்கு பஞ்சாயத்து பிரபல கொள்ளையன் கொலை

### நண்பர்கள் வெறிச்செயல்



**பாலக்கோடு, மே.08:** தர்மபுரி அருகே பிரபல கொள்ளையன் கொடூரமாக கொலை செய்யப்பட்டார். இவர் காதல் ஜோடிகளுக்கு பஞ்சாயத்து செய்து வந்த முன்விரோதத்தில் கொலை செய்யப்பட்டாரா அல்லது வேறு ஏதும் காரணமா என போலீசார் விசாரித்து வருகின்றனர். தர்மபுரி மாவட்டம் மாரண்டஅள்ளி அருகேயுள்ள பஞ்சப்பள்ளி அடுத்த பட்டாபி நகரை சேர்ந்தவர் சத்தியமூர்த்தி (27) திருமணமாகாதவர்.

இவர் பல்வேறு சமூக விரோத செயல்களில் ஈடுபட்டு வந்தார். இவர் மீது ஓசூர், காங்கேயம், சேலம் இரும்பாலை உள்ளிட்ட போலீஸ் ஸ்டேஷன்களில் டூவீலர் திருட்டு உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளன. இந்நிலையில் கடந்த 1ம் தேதி முதல் சத்தியமூர்த்தி மாயமாகினார். பல்வேறு இடங்களில் தேடியும் கிடைக்காததால் அவரது தாய் ராணி இதுகுறித்து பஞ்சப்பள்ளி போலீசில் புகார் செய்தார். இதன்பேரில் வழக்குப்பதிவு செய்த போலீசார், மாயமான சத்தியமூர்த்தியை தேடி வந்தனர்.

இந்நிலையில், கடந்த 1ம் தேதி மாலை சத்தியமூர்த்தி தனது நண்பர்கள் 5 பேருடன் சேர்ந்து மது அருந்தியதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து நண்பர்களை தொடர்பு கொண்டபோது 5 பேரின் செல்போன்களும் சுவிட்ச் ஆப் செய்யப்பட்டுள்ளது தெரியவந்தது. இதனால் சந்தேகமடைந்த போலீசார் தீவிர தேடுதல் வேட்டையை தொடங்கினர். இதில் சத்தியமூர்த்தியின் நண்பரான நமாண்டஅள்ளியை சேர்ந்த பூதையன் (எ) வெள்ளையன் (27) என்பவரை போலீசார் பிடித்து விசாரணை நடத்தினர்.

அதில், கடந்த 1ம் தேதி மாலை சத்தியமூர்த்தி மற்றும் நண்பர்கள் 5 பேர் சேர்ந்து பஞ்சப்பள்ளி அருகே உள்ள வேடம்பட்டி வனப்பகுதியில், மது அருந்திக்கொண்டிருந்துள்ளனர். அப்போது, சத்தியமூர்த்தி தகராறில் ஈடுபட்டுள்ளார். இந்த தகராறு முற்றியதில் ஆத்திரமடைந்த 5 பேரும் சேர்ந்து சத்தியமூர்த்தியை மரக்கட்டையால் தாக்கி, பாறையில் தலையை முட்டியுள்ளனர். இதில் சம்பவ இடத்திலேயே சத்தியமூர்த்தி உயிரிழந்துள்ளதால் அனைவரும் தப்பியோடி தலைமறைவாகி விட்டனர் என்பது தெரியவந்தது. இதை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு சென்ற போலீசார், வனப்பகுதியில் அழுகிய நிலையில் இருந்த சத்தியமூர்த்தியின் சடலத்தை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக தர்மபுரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதுகுறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார், சத்தியமூர்த்தியை நண்பர்கள் சேர்ந்து தொழில் போட்டியில் கொலை செய்தனரா? அல்லது பணம் பங்கு பிரிப்பதில் ஏற்பட்ட தகராறு காரணமா? என பல்வேறு கோணங்களில் விசாரித்து வருகின்றனர். மேலும், கொலை செய்யப்பட்ட கொள்ளையன், காதலிக்கும் ஜோடிகளுக்கு பிரச்னை ஏற்பட்டால் பஞ்சாயத்து செய்து காசு வாங்கி காதல் ஜோடிகளை சேர்த்து வைத்து வந்ததாக கூறப்படுகிறது. இதனால் இந்த விவாகரத்தில் ஏற்பட்ட முன்விரோதத்தில் கொலை செய்யப்பட்டாரா எனவும் போலீசார் விசாரித்து வருகின்றனர். இதுதொடர்பாக தலைமறைவாக உள்ள 4 பேரை போலீசார் தேடி வருகின்றனர்.

## சட்டமன்ற தேர்தலில் மு.க.ஸ்டாலின் தோல்வி: திமுக தொண்டர் விஷம் குடித்து தற்கொலை

**கடலூர், மே.08:** கடலூர் மாவட்டம் சிதம்பரம் சட்டமன்ற தொகுதி பரங்கிப்பேட்டை அடுத்த சி.புதுப்பேட்டை கிராமத்தை சேர்ந்தவர் ஆறுமுகம் (60 வயது). திமுக தொண்டரான இவர் பரங்கிப்பேட்டை கோர்ட்டில் உதவியாளராக பணியாற்றி ஓய்வு பெற்றவர் ஆவார்.

திமுக விசுவாசியான ஆறுமுகம் நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் கொளத்தூர் தொகுதியில் போட்டியிட்ட திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தோல்வியடைந்ததை நினைத்து கடும் மனவிரக்தியில் இருந்து வந்தார். இந்த நிலையில் மு.க.ஸ்டாலின் தேர்தலில் தோல்வியடைந்ததை தாங்கிக்கொள்ள முடியாத ஆறுமுகம் நேற்று முன்தினம் இரவு வீட்டில் இருந்த விஷத்தை எடுத்து குடித்து தற்கொலை செய்து கொண்டார்.

சேலம் சாமிநாதபுரம் பகுதியை சேர்ந்தவர் சில்வஸ்டார் (70 வயது). இவர், மாநகராட்சி 26-வது வார்டு திமுக அவைத்தலைவராக இருந்தார். கடந்த 4-ந்தேதி தேர்தல் முடிவை டி.வி.யில் பார்த்தபோது மு.க.ஸ்டாலின் தோல்வி அடைந்ததை கண்டு சில்வஸ்டார் அதிர்ச்சி அடைந்தார். பின்னர் அவருக்கு திடீரென மயக்கம் ஏற்பட்டது. இதனை கவனித்த குடும்பத்தினர் உடனடியாக அவரை மீட்டு சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

அப்போது, உடன் இருந்து கவனித்து வந்தவர்களிடம் சில்வஸ்டார், தேர்தலில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தோல்வி அடைந்ததை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை எனக்கூறி புலம்பி வந்துள்ளார். இந்த நிலையில் நேற்று அதிகாலை சில்வஸ்டாருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார்.

## தவெக எம்எல்ஏக்கள் தங்கியிருப்பதால் பூஞ்சேரியில் போலீஸ் குவிப்பு



**மாமல்லபுரம், மே.08:** பூஞ்சேரி பகுதியில் உள்ள தனியார் நட்சத்திர விடுதியில் சட்டப்பேரவை தேர்தலில் தவெக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற எம்எல்ஏக்கள் 2-வது நாளாக தங்கவைக்கப்பட்டுள்ளதால் பாதுகாப்பு பணிக்காக ஏராளமான போலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் 234 தொகுதிகளுக்கும் கடந்த மாதம் 23-ம் தேதி சட்டப்பேரவை தேர்தல் நடைபெற்றது. மேலும், வாக்கு எண்ணிக்கை கடந்த 4-ம் தேதி நடைபெற்றது. இதில், தமிழக வெற்றிக் கழகம் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற 108 சட்டப்பேரவை உறுப்பினர்கள் சென்னையை அடுத்த பனையூரில் உள்ள தமிழக வெற்றிக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில், தலைவர் விஜய் தலைமையில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்றனர்.

பின்னர், அங்கிருந்து புறப்பட்ட 80 எம்எல்ஏக்கள் மாமல்லபுரத்தை அடுத்த பூஞ்சேரி பகுதியில் அமைந்துள்ள போர் பாயிண்ட் என்ற தனியார் நட்சத்திர விடுதிக்கு வருகை தந்தனர்.

மேலும், தவெக ஆட்சி அமைக்கும் வரை இந்த விடுதியில் தங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக அக்கட்சியினர் தெரிவித்தனர். மேலும், தவெகவை சேர்ந்த எம்எல்ஏக்கள் தங்கியுள்ளதால் விடுதியின் முகப்பு பகுதியில் 2-வது நாளாக பாதுகாப்பு பணிக்காக ஏராளமான போலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர். மேலும், ஈசிஆர் சாலையில் போக்குவரத்து மாற்றங்களும் செய்யப்பட்டுள்ளன.

## தமிழக காவல் துறையின் உளவுத் துறையில் கூடுதலாக எஸ்.பி.க்கள் இருவர் நியமனம்



**சென்னை, மே.08:** புதிய அரசு பதவியேற்க உள்ள நிலையில், உளவுத்துறை ஐஜி-க்கு உதவும் வகையில், எஸ்பி-க்கள் இருவரை நியமித்து டிஜிபி சந்தீப் ராய்ரத்தோர் உத்தரவிட்டுள்ளார்.

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் அதிக இடங்களை கைப்பற்றி விஜய் ஆட்சி அமைக்க உள்ளார். இதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது.

முன்னதாக, தேர்தல் நடைபெற இருந்த நேரத்தில் உளவுத்துறை ஐஜி-யாக இருந்த செந்தில்வேலன் மாற்றப்பட்டு, அவிநாஷ் குமார் நியமிக்கப்பட்டார். அவர் அந்த பதவிக்கு புதிது என்பதாலும், தற்போது புதிய அரசு பதவி ஏற்க உள்ள நிலையிலும், உளவுத்துறையை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், தற்போது, அத்துறைக்கு கூடுதலாக ஐபிஎஸ் அதிகாரிகளான 2 எஸ்பி-க்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதன்படி, அரியலூர் மாவட்ட எஸ்பியாக இருந்த விஸ்வேஷ் பாலசுப்பிரமணியம் சாஸ்திரி, கள்ளக்குறிச்சி மாவட்ட எஸ்பி எஸ்.அரவிந்த் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான உத்தரவை டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் பிறப்பித்துள்ளார்.

உளவுத்துறையின் செயல்பாடுகளை மேம்படுத்தவும், காவல் துறை தொடர்பான உளவுத் தகவல்களைத் துரிதமாகக் கையாள்வதற்கும், நடந்து முடிந்த தேர்தல் தொடர்பான அவசரப் பணிகளில் கலந்து கொள்ளவும் இவர்களின் நியமனம் உதவும் என போலீஸ் அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த உத்தரவு வரும் வரை பெரம்பலூர் மாவட்ட எஸ்பி அரியலூர் மாவட்ட எஸ்பி பணியையும், விழுப்புரம் எஸ்பி கள்ளக்குறிச்சி மாவட்ட எஸ்பி பொறுப்பையும் கூடுதலாக கவனிப்பார்கள் என, டிஜிபி உத்தரவில் மேலும் தெரிவித்துள்ளார்.

புதிய அரசு பொறுப்பு ஏற்க உள்ளதால் அதற்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகள், முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டும் புதிய எஸ்பி-க்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## ஓய்வுபெறும் நாளிலேயே ஓய்வூதியம் பெறுவதற்கான ஆணை: 70 பேருக்கு வழங்கியது இபிஎஃப்ஓ



**சென்னை, மே.08:** 'பிரயாஸ்' திட்டத்தின் கீழ், ஓய்வுபெறும் நாளிலேயே ஊழியர்களுக்கான ஓய்வூதியம் பெறுவதற்கான ஆணைகளை 70 பேருக்கு, தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் வழங்கியது.

மத்திய அரசு 'பிரயாஸ்' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், ஓய்வு பெறும் ஊழியர்கள், ஓய்வுபெறும் நாளிலேயே அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும்.

அதன்படி, ஏப்ரல் மாதத்தில் பணி மூப்பு காரணமாக, ஓய்வு பெற்ற 70 ஊழியர்களுக்கு ஓய்வூதிய வழங்கல் ஆணைகளை தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தின் (இபிஎஃப்ஓ) சென்னை மண்டலம் வழங்கி சிறப்பித்தது.

சென்னை,ராயப்பேட்டை மண்டல அலுவலக வளாகத்தில், நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு ஓய்வூதிய வழங்கல் ஆணைகளை மண்டல வருங்கால வைப்பு நிதி ஆணையர் தேபி பிரசாத் பட்டாச்சார்யா வழங்கினார்.

நிகழ்ச்சியில், மண்டல வருங்கால வைப்பு நிதி ஆணையர் (ஓய்வூதியம்) நீரஜ் சிங், உதவிஆணையர்கள் பிபின்குமார், சந்திரசேகரன், கணக்கு அலுவலர் (ஓய்வூதியம்) ஏ.பிரகாஷ், மேற்பார்வையாளர் கே.ஆனந்தி, முதன்மை அதிகாரி சு.செந்தில்வேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

## நடிகை ஸ்ரீதேவியின் சொத்துக்கு உரிமை கோரி செங்கை நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நிராகரிப்பு



**சென்னை, மே.08:** மறைந்த நடிகை ஸ்ரீதேவி கடந்த 1988-ம் ஆண்டு சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் 2.7 ஏக்கர் நிலத்தை, சம்பந்த முதலியார் என்பவரது குடும்பத்தினரிடம் இருந்து விலைக்கு வாங்கியுள்ளார்.

கடந்த 37 ஆண்டுகளாக அந்த சொத்தை ஸ்ரீதேவியின் குடும்பத்தினர் அனுபவித்து வரும் நிலையில், சம்பந்த முதலியார் மகன் சந்திரசேகரனின் 2-வது மனைவியின் மகன் நடராஜன் மற்றும் மகள் சிவகாமி ஆகியோர் அந்த சொத்துக்கு உரிமை கோரியும், சொத்தில் பங்கு கேட்டும் செங்கல்பட்டு கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் உரிமையியல் வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்கை நிராகரிக்கக் கோரி ஸ்ரீதேவியின் கணவர் போனிகபூர், அவரது மகள்கள் ஜான்வி கபூர், குஷி கபூர் ஆகியோர் செங்கல்பட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். இந்த மனுக்களை ஏற்கெனவே விசாரித்த செங்கல்பட்டு நீதிமன்றம், முழுமையான விசாரணைக்குப் பிறகே சொத்தின் உரிமை குறித்து முடிவெடுக்க முடியும் என்று கூறி போனி கபூர் மற்றும் அவரது மகள்களின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து போனி கபூர், ஜான்வி கபூர், குஷி கபூர் ஆகியோர் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். அதில், 'அந்த சொத்தை சட்டப்படி விலைக்கு வாங்கி அனுபவித்து வரும் நிலையில் போலி வாரிசு சான்றிதழ் மூலமாக 37 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது சிலர் உரிமை கோரி வழக்கு தொடர்ந்துள்ளனர். எனவே, செங்கல்பட்டு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கை நிராகரிக்க வேண்டும்' என்று கோரியிருந்தனர்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி டி.வி.தமிழ்செல்வி, "ஏற்கெனவே ஸ்ரீதேவியின் குடும்பத்தாருக்கு எதிராக இந்த சொத்தில் பங்கு கேட்டு நடராஜன் மற்றும் சிவகாமி ஆகியோர் தொடர்ந்த வழக்கை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. ஆனால், அவர்கள் சொத்தை அபகரிக்கும் நோக்கில் செங்கல்பட்டு நீதிமன்றத்திலும் வழக்கு தொடர்ந்திருப்பது ஏற்புடையதல்ல" என்று கூறி அந்த வழக்கை நிராகரித்தும், செங்கல்பட்டு நீதிமன்ற உத்தரவை ரத்து செய்தும் உத்தரவிட்டுள்ளார்.

## தமிழக எல்லையில் காரில் கடத்தி வரப்பட்ட ரூ.2.27 கோடி ஹவாலா பணம் பறிமுதல்



**நீலகிரி, மே.08:** கேரள மாநிலம் வயநாடு மாவட்டம் சுல்தான் பத்தேரியில் இருந்து கர்நாடக மாநிலம் குண்டல்பேட்டை வழியாக மைசூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் கேரள, தமிழக எல்லையில் உள்ள முத்தங்கா சோதனைச்சாவடியில் காவல்துறை மற்றும் கலால்துறை போலீசார் நேற்று முன்தினம் வாகன சோதனை மேற்கொண்டனர்.

அப்போது அந்த வழியாக கர்நாடகாவில் இருந்து கேரளா நோக்கி ஒரு கார் வந்தது. அந்த காரை சோதனை செய்ய போலீசார் தடுத்து நிறுத்தினர்.

காரில் வந்த சுல்தான்பத்தேரி பகுதியைச் சேர்ந்த ஹர்ஷத் (44 வயது), கோழிக்கோடு மாவட்டம் கொடுவள்ளி பகுதியைச் சேர்ந்த இஸ்மாயில் (40 வயது) ஆகியோரிடம் போலீசார் விசாரணை நடத்தினர்.

அப்போது இருவரும் முன்னுக்குப் பின் முரணாக பேசினர். இதனால் போலீசாருக்கு அவர்கள் மீது சந்தேகம் எழுந்தது. இதைத்தொடர்ந்து காரில் சோதனையிட்டனர். அப்போது காரின் உள்ளே பல இடங்களில் சிறிய அளவிலான ரகசிய அறைகள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றில் கட்டுக்கட்டாக 500 ரூபாய் பணம் இருப்பது தெரிய வந்தது.

இதையடுத்து காரை முழுமையாக சோதனை செய்த போலீசார், காரில் இருந்த ரூ.2 கோடியே 27 லட்சத்து 43 ஆயிரத்தை பறிமுதல் செய்தனர். கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட காரை பறிமுதல் செய்த போலீசார், காரில் வந்த இருவரையும் கைது செய்தனர். சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார், இவ்வளவு பெரிய தொகை எங்கிருந்து, யாருக்கு கொண்டு செல்லப்படுகிறது? என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நீர்வரத்து முற்றிலும் நின்று வறண்டு காணப்படும் சுருளி அருவி.! சுற்றுலா பயணிகள் ஏமாற்றம்



தேனி: தேனி மாவட்டம் கம்பம் அருகே உள்ள சுருளி அருவியானது, கோடை மழை குறைவால் வறண்ட நிலையில் காணப்படுவதால் சுற்றுலா பயணிகள் மிகுந்த ஏமாற்றம் அடைந்து உள்ளனர். மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியில் மழை பொழிவு இல்லாததன் காரணமாக கடந்த சில மாதங்களாக சுருளி அருவிக்கு போதுமான நீர்வரத்து இல்லை. இதனால் இங்கு வரும் சுற்றுலா பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பி செல்கின்றனர். இந்த நிலையில் 2 நாட்களுக்கு முன் சுருளி அருவியின் நீர்ப்பிடிப்பு பகுதிகளான அரிசிப்பாறை, வெண்ணியாறு மற்றும் தூவானம் அணை பகுதிகளில் பெய்த மழையால், சுருளி அருவிக்கு தற்காலிகமாக தண்ணீர் வந்ததால் சுற்றுலாப்பயணிகள் குளித்து மகிழ்ந்தனர்.

ஆனால் தற்போது மழை இல்லாத காரணத்தால் சுருளி அருவிக்கான நீர்வரத்து முற்றிலும் நின்று,பாறைகள் மட்டுமே காணப்படுகின்றன. போதுமான மழை இல்லாததாலும், கடும் வெயில் காரணமாகவும் நீர்வரத்து அடியோடு நின்றுள்ளது. இதனால் கோடை விடுமுறையில் உற்சாகமாக அருவியில் குளிக்கலாம் என்று சுருளி அருவிக்கு கேரளா மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து வரும் சுற்றுலா பயணிகள்,பெருத்த ஏமாற்றத்துடன் திரும்பி செல்கின்றனர். அதுமட்டுமின்றி சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்ததால், இப்பகுதியை நம்பியுள்ள உள்ளூர் வியாபாரிகளின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது. அதே நேரம் தங்கள் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுக்க வரும் பொதுமக்களும் சுருளி அருவி பகுதியில் தண்ணீர் இல்லாததால் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

சுருளி அருவியில் தண்ணீர் இல்லாத காரணத்தால் சுற்றுலா பயணிகள் அருகிலுள்ள கும்பக்கரை அருவி போன்ற இடங்களுக்குச் செல்ல திட்டமிடுகிறார்கள். முன்னதாக, சில சமயங்களில் கனமழை காரணமாக நீர்வரத்து அதிகரித்து சுருளி அருவியில் குளிக்கத் தடை விதிக்கப்பட்டதும் உண்டு. ஆனால் தற்போதைய சூழலில் வறட்சியால் அருவி பொலிவிழந்து காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

# குடியிருப்பு பகுதியில் முகாமிட்ட காட்டு யானை - பொதுமக்கள் பீதி



**நீலகிரி, மே.08:** நீலகிரி மாவட்டம் ஊட்டி அருகே உள்ள காட்டேரி, கோலனி, செல்வி நகர் உள்ளிட்ட குடியிருப்புப் பகுதிகளில் 400-க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன.

இந்த நிலையில் அந்த கிராமங்களில் கடந்த சில நாட்களாக ஒரு காட்டுயானை நள்ளிரவு நேரத்தில் புகுந்து தொடர்ந்து உலா வருகிறது.

மேலும் அப்பகுதியில் இருக்கும் விவசாய நிலங்களுக்குள் புகுந்து விளைபயிர்களை சேதப்படுத்தி விட்டு செல்கிறது.

இதுகுறித்து அப்பகுதி மக்கள் அளித்த தகவலின் பேரில் வனத்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று அங்கு காட்டுயானையின் நடமாட்டத்தை தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

இந்த கிராமங்களில் முதல்முறையாக யானை நடமாட்டம் காணப்படுவதால், அப்பகுதி மக்கள் பெரும் அச்சத்தில் உள்ளனர்.

இதனால் அவர்கள் இரவு நேரங்களில் வெளியில் செல்லவே அச்சப்படும் சூழல் ஏற்பட்டு உள்ளது.

எனவே குடியிருப்பு பகுதியில் அசம்பாவிதங்கள் நடைபெறுவதற்கு முன்பாக, அந்த காட்டுயானையை மீண்டும் வனப்பகுதிக்குள் விரட்ட வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

# ‘நீ நதி போல ஓடிக் கொண்டிரு...’ - இலங்கை நாடாளுமன்றத்தில் விஜய்க்கு வாழ்த்து



**ராமேசுவரம், மே.08:** தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் விஜய் தலைமையிலான தவெக வெற்றி பெற்றுள்ளதற்கு இலங்கை நாடாளுமன்றத்தில் விஜய் பட பாடலைப் பாடி வாழ்த்து தெரிவித்தனர்.

இலங்கை நாடாளுமன்றக் கூட்டத்தில் இலங்கை தமிழரசு கட்சியின் எம்.பி. சாணக்கியன் ராசமாணிக்கம் பேசியதாவது: விஜய்க்கு வாழ்த்துகள். தமிழ்நாடு மக்களோடும், தமிழ்நாட்டு அரசோடும் ஈழத் தமிழர்களுடைய பிரச்சினைகளுக்காக பணிசெய்ய காத்துக் கொண்டிருக்கிறோம்” என்று கூறினார்.

தொடர்ந்துபேசிய இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளரும், எம்.பி.யுமான நிஸாம் காரியப்பர் கூறுகையில், “எல்லா புகழும் இறைவன் ஒருவனுக்கே, நீ நதி போல ஓடிக் கொண்டிரு...” என்ற விஜய் நடித்த அழகிய தமிழ் மகன் திரைப்படத்தில் வரும் பாடலை பாடி, வாழ்த்தினார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி பொதுச் செயலாளர் ம.ஆ.சுமந்திரன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் இலங்கைத் தமிழ் மக்களுக்கு, தமிழ்நாட்டு மக்கள், அரசின் ஆதரவு தொடர்ந்து இருக்க வேண்டும் என்றார்.

தமிழ் தேசியப் பேரவைத் தலைவரும், எம்.பி.யுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் இலங்கைத் தீவில் ஈழத் தமிழர்கள் நீண்டகாலமாக தங்களது தமிழ்த் தேச அங்கீகாரத்துக்காக போராடி வருகின்றனர்.

தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த அரசியல் மாற்றம், எமது உரிமைப் போராட்டத்துக்கு வலுவைத் தரும் என எதிர்பார்க்கிறோம் என தெரிவித்துள்ளார்.

# அரசியல் கார்னர்

## தவெக உடன் கூட்டணி வைத்தது காலத்தின் கட்டாயம்: காங்கிரஸ் விளக்கம்



**சென்னை, மே.08:** தமிழ்நாடு சட்டமன்ற காங்கிரஸ் தலைவர் ராஜேஷ் குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

தமிழக சட்டமன்றத் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு உருவான அரசியல் சூழலில், தமிழக வெற்றிக் கழகத்தை காங்கிரஸ் ஆதரிப்பது குறித்துச் சில விமர்சனங்கள் திட்டமிட்டு முன்வைக்கப்படுகின்றன. குறிப்பாக, பதவி ஆசைக்காகவும் தமிழக மக்களுக்குத் துரோகம் இழைக்கும் வகையிலும் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் சிலர் முதுகில் குத்திவிட்டதாக கூறுவதை இந்திய தேசிய காங்கிரஸ் முற்றிலுமாக மறுக்கிறது.

தேர்தல் அறிவிப்பிற்கு முன்பே பல்வேறு அரசியல் அழைப்புகள் எங்களுக்கு வந்ததை நாடறியும். இருப்பினும், மதவாத சக்திகளுக்கு எதிராக “இந்தியா” கூட்டணியில் பயணிப்பதில் நாங்கள் உறுதியாக இருந்தோம். கடந்த சட்டமன்றத் தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றிபெற காங்கிரஸ் தொண்டர்கள் களத்தில் கடுமையாக உழைத்தனர் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

ஜனநாயக நாட்டில் மக்களின் எண்ண ஓட்டம் சில நேரங்களில் எதிர்பாராத தேர்தல் முடிவுகளை தருகிறது. அந்த வகையில், தமிழக மக்களின் தற்போதைய மனநிலை மற்றும் ஜனநாயக முடிவுகளுக்குத் தலைவணங்கி, மாநிலத்தின் எதிர்கால நலன் கருதி இந்த முடிவை எடுத்துள்ளோம். தமிழக வெற்றிக் கழகம் தன்னை ஒரு மதச்சார்பற்ற கட்சியாகவே முன்னிறுத்திச் செயல்பட்டு வருகிறது.

குறிப்பாக, அக்கட்சியின் தலைவர் விஜய் பெருந்தலைவர் காமராஜரை தனது கொள்கைத் தலைவராக ஏற்று, அவர் காட்டிய வழியில் சமூக நீதிக்காகத் தொடர்ச்சியாகப் பயணிப்போம் என்கிற கொள்கையைப் பிரகடனப்படுத்தியுள்ளார். பெருந்தலைவர் காமராஜரின் லட்சியங்களை உள்வாங்கி, சமூக நீதிப் பாதையில் பயணிப்பதாக அறிவித்துள்ள ஒரு இயக்கத்தை ஆதரிப்பது, தமிழகத்தில் மதச்சார்பற்ற விழுமியங்களை வலுப்படுத்தும் என்று காங்கிரஸ் நம்புகிறது.

ஆர்.எஸ்.எஸ் மற்றும் மதவாத சக்திகள் தமிழகத்திற்குள் எந்தக் காலத்திலும் காலூன்றி விடக்கூடாது என்பதில் காங்கிரஸ் சமரசமற்ற உறுதியைக் கொண்டுள்ளது. மதச்சார்பற்ற சக்திகள் அனைத்தும் ஓரணியில் திரள வேண்டும், தமிழகத்தில் ஒரு வலிமையான மதச்சார்பற்ற ஆட்சி அமைய வேண்டும் என்பதே எங்களின் ஒரே நோக்கம். இதில் தமிழக மக்களுக்குத் துரோகம் இழைக்கப்படுவதாகக் கூறுவது அடிப்படை ஆதாரமற்றது.

தமிழக மக்களின் நலனையும், மாநிலத்தின் அமைதியையும் கருத்தில் கொண்டு, மதவாத சக்திகளைத் தனிமைப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம். இத்தகைய அரசியல் சூழலைக் கருத்தில் கொண்டே இந்த ஆதரவு முடிவு எடுக்கப்பட்டுள்ளது. காங்கிரஸ் கட்சி என்றும் மதவாதத்திற்கு எதிராகவும், தமிழக மக்களின் உணர்வுகளுக்கு ஆதரவாகவும், சமூக நீதியைக் காக்கவும் தனது பயணத்தைத் தொடரும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## மக்கள் தீர்ப்பின்படி விஜய் முதல்-அமைச்சராக பதவியேற்பதுதான் சரி - திருமாவளவன்



**சென்னை, மே.08:** தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் விஜய் தலைமையிலான த.வெ.க. 108 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்க உரிமை கோரி கவர்னரை சந்தித்துள்ளது. பெரும்பான்மைக்கு 118 இடங்கள் தேவை என்பதால் தி.மு.க. கூட்டணியில் உள்ள காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள் கட்சி மற்றும் கம்யூனிஸ்டு கட்சிகளுக்கு த.வெ.க. சார்பில் ஆதரவு கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதில், 5 இடங்களில் வெற்றி பெற்றுள்ள காங்கிரஸ் கட்சி அதிகாரப்பகிர்வு என்ற நிபந்தனையுடன் த.வெ.க.வுக்கு ஆதரவு அளித்துள்ளது.

இதனால், விஜய்க்கு ஆதரவு எம்.எல்.ஏ.க்களின் எண்ணிக்கை 113 ஆக உயர்ந்துள்ளது. பெரும்பான்மைக்கு இன்னும் 5 இடங்கள் தேவை. விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு 2 எம்.எல்.ஏ.க்கள் இருக்கின்றனர். இதற்கிடையே, த.வெ.க.வுக்கு ஆதரவு அளிப்பது குறித்து சென்னையில் உள்ள விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைமை அலுவலகத்தில் இன்று (வியாழக்கிழமை) அக்கட்சி தலைவர் திருமாவளவன் தலைமையில் உயர்நிலை குழு கூட்டம் நடைபெறுவதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலை யில், உயர்நிலைக்குழு கூட்டம் திடீரென ரத்து செய்யப்பட்டது.

இதுகுறித்து, விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகி ஒருவர் கூறுகையில், ‘கியாஸ் சிலிண்டர் விலை உயர்வை கண்டித்து இன்று விடுதலை சிறுத்தைகள் கட்சியும், கம்யூனிஸ்டு கட்சிகளும் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகிறது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு பின்னர் கம்யூனிஸ்டு கட்சியுடன் ஆலோசனை கூட்டம் நடைபெற உள்ளது. இதில், த.வெ.க.வுக்கு ஆதரவு அளிக்கலாமா? வேண்டாமா? என்பது குறித்து ஆலோசிக்கப்படும். அதன் பின்னர், கட்சியின் உயர்நிலைக் குழு கூட்டம் நடைபெற்று அறிவிப்பு வெளியிடப்படும்’ என்றார்.

இந்நிலையில் த.வெ.க. தலைவர் விஜய்யை பதவியேற்க அனுமதிக்க வேண்டும் என்று விசிக தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அவர், “தனிப்பெரும் கட்சியாக த.வெ.க.வை மக்கள் தேர்ந்தெடுத்திருக்கின்றனர். எனவே விஜய்யை பதவியேற்க அனுமதிக்க வேண்டும். ஆனால் கவர்னர் இன்னும் முடிவு எடுக்காமல் குழப்பம் உருவாவதற்கு இடம் கொடுக்கிறார். இது ஏற்புடையதல்ல..

118 எம்எல்ஏக்கள் ஆதரவை காண்பித்துவிட்டு பதவியேற்புக்கு வாருங்கள் என கவர்னர் சொல்ல முடியாது. த.வெ.க. தலைவர் விஜய்க்கு பெரும்பான்மை இருக்கிறதா என்பதை சட்டமன்றத்தில்தான் நிரூபிக்க வேண்டும். அமித் ஷா விளையாட்டு தமிழகத்தில் அரங்கேறுகிறது. பா.ஜ.க. தலையீட்டை தமிழகத்தில் நாங்கள் அனுமதிக்கமாட்டோம்.

மக்கள் தீர்ப்பின் படி விஜய் முதல்-அமைச்சராக பதவியேற்பதுதான் சரி. எங்களுடன் இணைந்து த.வெ.க .ஆட்சியமைக்க விரும்புவதை நாங்கள் பரிசீலிக்கிறோம். ஆட்சி அமைக்க ஆதரவு அளிப்பது தொடர்பாக விஜய் கடிதம் எழுதினார். போனில் பேசினார்.. ஆலோசித்து முடிவு செய்வோம் என்று கூறியிருக்கிறோம்.” என்று திருமாவளவன் கூறினார்.

# நடத்தையில் சந்தேகம்: சுத்தியலால் அடித்து பெண் கொலை - கணவன் கைது

**மதுரை, மே.08:** மதுரை பரவை அருகே சுவாமிநாதன் நகரை சேர்ந்தவர் கார்த்திகேயன் (39 வயது). லாரி டிரைவர். இவருடைய மனைவி அமலா (35 வயது). இவர்களுக்கு கிஷோர் (14 வயது), அருண் (10 வயது) என்ற மகன்களும், நிவாஷிகா (12 வயது) என்ற மகளும் உள்ளனர்.

கார்த்திகேயன் சரிவர வேலைக்கு செல்லாமல் மது குடித்து விட்டு மனைவியிடம் தகராறு செய்து வந்துள்ளார். மேலும் கட்டிட வேலைக்கு சென்ற மனைவி அமலாவின் நடத்தையில் சந்தேகப்பட்டு தகராறில் ஈடுபட்டு வந்ததாகவும் கூறப்படுகிறது.

இதனால் 2 ஆண்டுகளுக்கு முன்பு அமலா கோபித்துக்கொண்டு, தனது மகன்கள், மகளுடன் பரவையில் உள்ள தனது தந்தை வீட்டில் வசித்து வந்தார். சம்பவத்தன்று பரவையில் உள்ள மாமனார் வீட்டுக்கு கார்த்திகேயன் சென்றார். அவர் மதுபோதையில் இருந்ததாக கூறப்படுகிறது. வீட்டிற்குள் தூங்கி கொண்டிருந்த மனைவி அமலாவின் தலையில் சுத்தியலால் அடித்துவிட்டு, கார்த்திகேயன் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார்.

இதில் தலையில் பலத்த காயம் அடைந்து உயிருக்கு போராடிய அமலாவை, சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலையில் பரிதாபமாக அமலா உயிரிழந்தார். இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து கார்த்திகேயனை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# தூத்துக்குடி எஸ்.பி. பெயரில் போலி முகநூல் பக்கம்; பண மோசடி முயற்சி

## பொதுமக்களுக்கு காவல்துறை எச்சரிக்கை

**தூத்துக்குடி, மே.08:** தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. மதன் பெயர் மற்றும் புகைப்படத்தைப் பயன்படுத்தி மர்ம நபர்கள் சிலர் போலி முகநூல் (Facebook) பக்கத்தை உருவாக்கியுள்ளனர்.




இந்தத் திரிக்கப்பட்ட பக்கத்தின் மூலம் பொதுமக்களிடம் பண உதவி கேட்டும், பல்வேறு மோசடி வேலைகளில் ஈடுபட்டும் வருவது போலீசாரின் கண்காணிப்பில் தெரியவந்தது.

காவல்துறை உயர் அதிகாரியின் பெயரிலேயே மோசடி நடப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்த தூத்துக்குடி சைபர் குற்றப்பிரிவு போலீசார், இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்துள்ளனர். அந்தப் போலி பக்கத்தை உருவாக்கியது யார்? பின்னணியில் இருக்கும் கும்பல் எது? என்பது குறித்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதுகுறித்து காவல்துறை தரப்பில் விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது:

காவல்துறை அதிகாரிகள் யாரும் முகநூல் அல்லது சமூக வலைதளங்கள் வாயிலாக பொதுமக்களிடம் பணம் கேட்கமாட்டார்கள். அதிகாரிகளின் பெயரில் வரும் பண கோரிக்கைகளையோ அல்லது மிரட்டல்களையோ பொதுமக்கள் யாரும் நம்ப வேண்டாம்.

தெரியாத நபர்களுக்கோ அல்லது சந்தேகத்திற்குரிய கணக்குகளுக்கோ பணத்தை அனுப்பி ஏமாற வேண்டாம். சமூக வலைதளங்களைப் பயன்படுத்தும் பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறு மாவட்ட காவல்துறை சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# செயற்கையாக பழுக்க வைத்த மாம்பழங்கள் பறிமுதல்

## உணவு பாதுகாப்பு அதிகாரிகள் அதிரடி

**நீலகிரி, மே.08:** நீலகிரி மாவட்டம் குன்னூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் ரசாயன கற்கள் மூலம் செயற்கையாக பழுக்க வைத்த மாம்பழங்கள் விற்பனை செய்யப்படுவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டினர்.

இந்த நிலையில் மாவட்ட உணவு பாதுகாப்பு அதிகாரிகள் குழுவினர் குன்னூரில் நேற்று திடீர் ஆய்வு மேற்கொண்டனர். இதில் கால்சியம் கார்பைடு கற்கள் மூலம் செயற்கையாக பழுக்க வைத்த 25 கிலோ மாம்பழங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

தொடர்ந்து சம்பந்தப்பட்ட கடை வியாபாரிகளுக்கு தலா ரூ.1000 வீதம் அபராதம் மற்றும் எச்சரிக்கை நோட்டீசுகளும் வழங்கப்பட்டு உள்ளன.

இதுகுறித்து உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் கூறியதாவது:-

மாம்பழ சீசனில் அதிக லாபம் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக வியாபாரிகளில் ஒரு சிலர் ரசாயன கற்கள் மூலம் செயற்கையாக பழுக்க வைத்து விற்பனை செய்து வருகின்றனர்.

இத்தகைய முறையில் பழுக்க வைக்கப்படும் மாம்பழங்கள் வெளிப்படையாக கவர்ச்சியாக மஞ்சள் நிறத்தில் தோன்றினாலும், அவற்றின் உள்ளமைப்பில் இயல்பான சுவை-மணம் குறைவாக இருக்கும்.

மேலும் மாம்பழத்தை பழுக்க வைப்பதற்காக பயன்படுத்தப்படும் ரசாயன கற்களில் இருந்து வெளிவரும் அசெட்டிலீன் வாயு, மனித உடலுக்கு தீங்கு விளைவிக்கும்.


எனவே மாம்பழங்களை வாங்கும்போது மிக அதிக மஞ்சள் நிறம் மற்றும் ஒரே மாதிரியான தோற்றம் உள்ள பழங்களை வாங்குவதை தவிர்ப்பது நல்லது.

இயற்கையான மணம் உள்ளதா என்று சோதித்து பார்த்து வாங்க வேண்டும். முடிந்தவரை நம்பகமான விற்பனையாளர்களிடம் இருந்து மாம்பழங்களை வாங்கலாம்.

மேலும் இதுகுறித்து ஏதேனும் சந்தேகம் இருக்கும் பட்சத்தில் உடனடியாக உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகளிடம் புகார் தெரிவிக்கலாம். இவ்வாறு அவர்கள் கூறி உள்ளனர்.

# கரும்பு கொள்முதல் விலையை ரூ.93 மட்டும் உயர்த்துவது போதுமானதல்ல: டன்னுக்கு ரூ.4500 வழங்க வேண்டும்! அன்புமணி

**சென்னை, மே.08:** பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,



நாடு முழுவதும் வரும் அக்டோபர் மாதம் தொடங்கவுள்ள 2026-27ஆம் ஆண்டுக்கான அரவைப் பருவத்தில், 10.25% சர்க்கரைச் சத்து கொண்ட கரும்புக்கான கொள்முதல் விலை ரூ.3650 ஆகவும், தமிழகத்தில் சாகுபடி செய்யப்படும் கரும்புக்கான கொள்முதல் விலை டன்னுக்கு ரூ.3383 ஆகவும் உயர்த்தப்படுவதாக மத்திய அரசு அறிவித்திருக்கிறது. இந்த விலை உயர்வு எந்த வகையிலும் போதுமானதல்ல.

டெல்லியில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் கரும்புகளில் 9.50%க்கும் குறைவான சர்க்கரைச் சத்து மட்டுமே இருக்கும் என்பதால் அவற்றுக்கு டன்னுக்கு ரூ.3,383 வழங்கப்படும். இது 2025-26 ஆண்டின் கொள்முதல் விலையான ரூ.3290 உடன் ஒப்பிடும் போது ரூ.93, அதாவது 2.82% மட்டுமே அதிகமாகும். 2024-25ஆம் ஆண்டில் இதே வகையான கரும்புக்கு ரூ.3151 வழங்கப்பட்டது. கடந்த ஆண்டு அதை விட ரூ.139, 4.41% கொள்முதல் விலை உயர்த்தப்பட்டது. ஆனால், அதனுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டில் பாதியளவு மட்டுமே உயர்த்தப்பட்டிருக்கிறது.

ஒரு டன் கரும்பு உற்பத்தி செய்வதற்கு ரூ.3300 செலவாகும் நிலையில், அதை விட வெறும் ரூ.83 மட்டும் கூடுதலாக விலை கொடுத்தால் உழவர்களுக்கு எந்த இலாபமும் கிடைக்காது. கரும்பு சாகுபடிக்காக ஆண்டு முழுவதும் உழைக்கும் விவசாயிகளுக்கு இலாபமே இல்லை என்றால், வேளாண்மையை, குறிப்பாக கரும்பு சாகுபடியை உழவர்கள் முற்றிலுமாக கைவிட்டு விடுவர். அப்படி ஒரு நிலைமை ஏற்படுவதை தடுக்க வேண்டும் என்றால் கரும்புக்கு கட்டுபடியாகும் கொள்முதல் விலை வழங்கப்பட வேண்டும்.

ஒரு டன் கரும்பு உற்பத்தி செய்வதற்கு ரூ.3,300 வரை செலவாகும் நிலையில், அதனுடன் 50% இலாபம் மற்றும் போக்குவரத்துச் செலவு சேர்த்து டன்னுக்கு ரூ.5000 வழங்க வேண்டும் என்பது தான் பாட்டாளி மக்கள் கட்சியின் கோரிக்கை. ஆனால், கிட்டத்தட்ட உற்பத்தி செலவுக்கு இணையான தொகையையே கொள்முதல் விலையாக மத்திய அரசு அறிவித்திருக்கிறது. இதனால் உழவர்களுக்கு ஏற்படும் இழப்பை மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து தான் ஈடு செய்ய வேண்டும். அது தான் நியாயமாக இருக்கும்.

தமிழ்நாட்டில் 2016&ஆம் ஆண்டு வரை கரும்புக்கு ரூ.750 வீதம் ஊக்கத்தொகை சேர்த்து கொள்முதல் விலை வழங்கப்பட்டு வந்தது. ஓ.பன்னீர்செல்வம் முதலமைச்சராக இருந்த காலத்தில் அது நிறுத்தப்பட்டு விட்டது. நாங்கள் ஆட்சிக்கு வந்தால், ஊக்கத்தொகையை மீண்டும் வழங்குவோம் என்று திமுக வாக்குறுதி அளித்திருந்தது. அவ்வாறு வழங்கப்பட்டிருந்தால் அது இப்போது டன்னுக்கு குறைந்தது ரூ.1200 ஆக அதிகரித்திருக்கும். ஆனால், அந்த அளவுக்கு ஊக்கத்தொகை வழங்காத திமுக அரசு கடைசியாக 2024&25 பருவத்தில் டன்னுக்கு ரூ.349 மட்டுமே வழங்கியது. நடப்பு பருவத்தில் அதுவும் வழங்கப்படவில்லை.

கரும்புக்கு டன்னுக்கு ரூ.5000 கொள்முதல் விலையை உடனடியாக வழங்க முடியாத சூழல் இருந்தால், நடப்பாண்டில் முதல் கட்டமாக 4500 ரூபாயாவது கொள்முதல் விலை வழங்கப்பட வேண்டும். அதற்காக இப்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள கொள்முதல் விலையை குறைந்தது ரூ.500 மத்திய அரசு அதிகரிக்க வேண்டும். மீதமுள்ள 617 ரூபாயை தமிழகத்தில் புதிதாக அமையும் அரசு ஊக்கத் தொகையாக வழங்கி உழவர்களுக்கு ஒரு டன் கரும்புக்கு ரூ.4,500 கொள்முதல் விலை கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM